வெளியீடு : 9-11-2016 Issued : 9-11-2016

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஜூன் 23, 2016—தொகுதி 3—எண் 2**

**Thursday, the 23rd June 2016—Volume 3—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 23–6–2016

### உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | | *பக்கங்கள்* |
| **1.** | **வினாக்கள்–விடைகள்—** | |
| | *உடுக்குறியிட்ட வினாக்கள்* | 209-217 |
| **2.** | **ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்– விவாதத்திற்கான பதிலுரை—** | 217-251 |
| | *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 217-250 |
| **3.** | **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | |
| | *(அ) தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016* | 251-272 |
| | *மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி* | 251-252, 259-262, 264-267, 272 |
| | *திரு. மா. சுப்பிரமணியன்* | 252-258 |
| | *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 255 |
| | **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 257 |
| | *திரு. ஜே.ஜி. பிரின்ஸ்* | 259 |
| | **திரு. பு. வெற்றிவேல்* | 259 |
| | **திரு. மு.க. ஸ்டாலின்* | 265-266 |
| | **திரு. துரைமுருகன்* | 267-269 |

**3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—*தொடர்ச்சி* *பக்கங்கள்*

*(அ) தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016—தொடர்ச்சி*

*திரு. அர. சக்கரபாணி* 270

*(ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016* 273-275

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி* 273, 274

*(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016* 275-286

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி* 275, 279, 283-286

**திரு. எ.வ. வேலு* 276-280

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 278

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* 280-282

**திரு. துரைமுருகன்* 282

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்* 283

**4. அரசினர் தீர்மானம்—**

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் 287-289

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 289

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, ஆனி 9, திருவள்ளுவர் ஆண்டு–2047

## 2016 ஜூன் 23, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

ஒழுக்கம் எல்லோருக்கும் உயர்வைத் தரும். அதனால், அந்த ஒழுக்கத்தை உயிரைக் காட்டிலும் சிறந்ததாக போற்றி காக்கவேண்டும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண்கள் 1, 2, 3 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

4—

### துணை மின் நிலையம்

***572—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2016 ஜூன் 23

திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலுள்ள திடீர் குப்பம், புதுமல்லவாடி பகுதியில், மல்லவாடி 33/11 K.V. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தச் சட்டமன்றத்தில் மூன்றாவது முறையாகப் பேசுவதற்கு வாய்ப்பை வழங்கி, இரண்டு முறை அமைச்சராக இருக்க வாய்ப்பை வழங்கி, இன்றையதினம் மின் துறை அமைச்சர் என்ற முறையில் முதல் கேள்விக்குப் பதில் சொல்கின்ற வாய்ப்பை வழங்கிய எங்கள் குடும்ப தெய்வம், என்றென்றும் நாங்கள் வழிபடுகின்ற இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், திடீர் குப்பம், புதுமல்லவாடி பகுதிக்கு அருகில் ஏற்கெனவே மல்லவாடி 33/11 K.V. துணை மின் நிலையம் உள்ளது. தற்போது, அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது உச்சபட்ச மின் தேவை எவ்வளவோ அந்த அளவிற்கு போதிய திறனுள்ள துணை மின் நிலையம் இருக்கின்ற காரணத்தினால், புதிய மின் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. தேவை இருப்பின், வருங்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலுள்ள திடீர் குப்பம், மல்லவாடியில் 33/11 K.V. துணை மின் நிலையம் உள்ளது. இம்மின் நிலையம் கடந்த 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிலையத்திற்கு 1 x 8 M.V.A. power transformer உள்ளது. குறைந்த மின் அழுத்தம்

2016 ஜூன் 23]

*காரணமாகக் கூடுதலாக 1 x 8* M.V.A. power transformer *தேவைப்படுகிறது. குறைந்த மின் அழுத்தத்தால், விவசாயிகளுடைய மின் மோட்டார்களின்* coil *பழுதாகி, அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற நிலையை மாற்றுவதற்குக் கூடுதலாக* 1 x 8 M.V.A. power transformer *அமைக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லவாடி 33/11* K.V. *துணை மின் நிலையத்தில் அமைந்துள்ள மின் மாற்றியின் திறன்* 1 x 8 M.V.A. *இப்பொழுது உச்சபட்சத் தேவை 7.658 அளவு மட்டும்தான் இருக்கின்றது.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் பகுதியில் மின் நுகர்வு வளர்ச்சி என்பது மிகவும் குறைவாக இருக்கின்றது. அதாவது 0.01 சதவிகித அளவிற்கு, ஏற்கெனவே நிறுவப்பட்டதில் குறைவாகத்தான் இருக்கின்றது. எனவே, 1 x 8* M.V.A. *திறன் கொண்ட மின் மாற்றி ஐந்து வருடங்களுக்குப் போதுமானதாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் தேவை இருக்கும் என்று சொன்னால், கூடுதலாக ஒரு 8* M.V.A. *திறன்கொண்ட மின் மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

**திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுமல்லவாடி, பழையமல்லவாடி, துரிஞ்சாபுரம், வடகரிம்பலூர், உசம்பாடி, சீலப்பந்தல், கொளக்கரவாடி, கருந்துவம்பாடி உள்ளிட்ட பத்து ஊர்களில் இரண்டாயிரம் மின் மோட்டார் பம்புகள் இருக்கின்றன. மின்சாரம் சரியாகக் கிடைக்காத காரணத்தினால், மோட்டார்களின்* coil–*கள் பழுதடைந்து விடுகின்றன. கிராமங்களில் உள்ள விளக்குகள் சரியாக எரியாமல் இருக்கின்றன. இன்றைக்கு, தமிழ்நாடு மின் மிகை மாநிலம் என நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். பல விவசாயிகள், பல நாட்களாக இலவச*

மின்சாரம் பெற, காத்திருப்போர் பட்டியலில் காத்துக் கிடக்கிறார்கள். என் தொகுதி, விவசாயம் சார்ந்த தொகுதியாக இருக்கிறது. எனவே, இந்த மின்மாற்றி அமைத்து அவர்களுக்கும் மின்சார இணைப்பு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது தமிழ்நாடு மின் மிகை மாநிலம் என அறிவித்திருக்கின்றீர்கள் என்று சொன்னார்கள். கடந்த காலம் மற்றும் இப்போதுள்ள நிலை, அதாவது எப்போதுமே மின் வெட்டு இல்லாமல் இருக்கின்றது என்பதை அவரே உணர்ந்து கொண்டிருப்பார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நேற்றையதினம் எவ்வளவு விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை நான் சொல்லியிருக்கின்றேன். ஏற்கெனவே சொன்னதுபோல, தேவையிருப்பின் உடனடியாக 8 M.V.A. திறன்கொண்ட மின் மாற்றி அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) பின்னர் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். வாய்ப்பு இருக்கிறது, தருகிறேன். உட்காருங்கள். நான் அழைக்கின்றேன், உட்காருங்கள். சில வரிசையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டியுள்ளது. கொஞ்சம் உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருவேன். நிறைய கேள்விகள் எடுத்துக்கொள்ளலாம். இன்னும் நேரமிருக்கிறது (குறுக்கீடு). வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடர் வருகிறது, அப்போது எடுத்துக்கொள்ளலாம். நிறைய கேள்விகளுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

2016 ஜூன் 23]
**7—**

## மாம்பழச் சாறு

***128—திரு. டி. செங்குட்டுவன்:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பள்ளி மாணவர்களுக்கு சத்துணவுடன் மாம்பழச் சாறு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு தென்றலின் கனிவாய், பகைவர்களுக்குப் புயலின் வலுவாய், வழங்குவதில் வள்ளல் குணமாய், வரலாறு படைப்பதில் வெற்றியின் வடிவாய், பாசத்தில் தாயின் உருவாய், (மேசையைத் தட்டும் ஒலி) பாதுகாப்பதில் தெய்வத்தின் அருளாய், எதிரிகளுக்கு சிம்மசொப்பனமாய், (மேசையைத் தட்டும் ஒலி) என்றுமே சிம்மாசனத்திற்கு உரியவராய் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், ஊஞ்சானூர் என்ற குக்கிராமத்தில் பிறந்து, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் அரசு மகப்பேறு மருத்துவராகப் பணிபுரிந்த எனக்கு, அரசியலில் முகவரி தந்து, அங்கீகாரம் அளித்து, 1991 ஆம் ஆண்டு சங்கரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக்கி, இரண்டு முறை ராசிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மக்களவைக் குழுத் தலைவராக்கி, நாடாளுமன்ற இரு அவைகளினுடைய குழுத் துணைத் தலைவராக்கி, தாட்கோ வாரியத் தலைவராக்கி, தமிழ்நாடு தகவல் ஆணையராக்கி பல்வேறு பொறுப்புகளில் பணியாற்ற ஆணையிட்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று அன்னை அவர்கள் என்னை ராசிபுரம்*

*தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சராக்கி, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன்* (Vision–2023) *வழிகாட்டுதலின்படி மகளிர் நலம், சமுதாயத்தின் அடித்தளத்துப் பிரிவினர் அனைவரின் நலம், நலிவுற்ற பிரிவினரின் சுகாதாரம், ஊட்டச்சத்து, பாதுகாப்பு, மாற்றுத் திறனாளிகளின் வாழ்வு வளம் பெற பணியாற்ற ஆணையிட்டுள்ளார்கள்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் மகளிர், எதிலும் மகளிர், என்றும் மகளிர் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற தாரக மந்திரத்தைக் கொண்டுள்ளவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தாய் நலம் காக்கும் தொண்டுள்ளம் கொண்ட எங்கள் அம்மா நவீன காலத்தின் அன்னை தெரசா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! துணிவில், அறிவில், செயலில் தாங்கள்தான் அம்மா. கனிவில், அன்பில், பண்பில், தாங்கள்தான் அம்மா. பெண்களே போற்றும் பெண் தெய்வம் தாங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) பிரபஞ்சத்தின் சக்தியில் உங்களுக்கு யார் நிகர் அம்மா? தங்களைப் பணிந்து வணங்குகிறேன் அம்மா.*

*முற்பகல் 10–10*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்த ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி வாக்காள எஜமானர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) பள்ளி மாணவர்களுக்கு சத்துணவுடன் மாம்பழச் சாறு வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் மூன்று முறை நான் உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு காரணகர்த்தாவாக*

2016 ஜூன் 23]

இருந்து, தேர்தலில் போட்டியிட நான்கு முறை வாய்ப்பளித்த எங்களுடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஓயாத உழைப்பாளி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தினுடைய பொருளாளர் அன்புத் தளபதியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த கிருஷ்ணகிரி வாக்காளர் பெருமக்களுக்கும் முதலிலே என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கிருஷ்ணகிரி மாவட்டத்தில்தான் மாம்பழம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. சுமார் 40,000 எக்டேர் நிலப்பரப்பிலே மாம்பழம் உற்பத்தியாகிறது. ஆண்டுக்கு சுமார் மூன்றரை இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மேற்படி மாம்பழம் சுமார் 40—க்கும் மேற்பட்ட தனியார் ஆலைகள்மூலம் மாம்பழக் கூழாக மாற்றப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு சுமார் இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழம்தான் மாம்பழக் கூழாக அரைக்கப்படுகிறது. மீதமுள்ள ஒன்றரை இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழம் வீணாக்கப்படுகிறது. சாலைகளிலே கொட்டப்பட்டு, அழுகி வீணாகிறது. இதனால் விவசாயிகள் பெருத்த நட்டத்திற்கு ஆளாகிறார்கள். ஆதலால், தனியார் ஆலைகள்மூலம் அரைக்கப்பட்டு, ஏற்றுமதி ஆகாமல் தேங்கியுள்ள மாம்பழச் சாறை அரசே கொள்முதல் செய்து, அரசுப் பள்ளிகளிலே சத்துணவோடு மாம்பழ ஜூஸ்—ஐயும் மாணவர்களுக்கு வழங்குவதன்மூலம் மாம்பழ விவசாயிகளுக்கு ஏற்படும் நட்டத்தையும் தவிர்த்திட முடியும், மாணவர்களுக்கும் சத்தான உணவை வழங்குவதற்கு வாய்ப்பும் ஏற்படும். ஆதலால், மேற்படி திட்டத்தைச் செயல்படுத்திட அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பழச் சாறும், மாம்பழக் கூழும் உபரியாக இருக்கிறது என்றால் அதற்கு என்ன வழி காணலாம், எப்படி விற்பனை செய்யலாம், எப்படி ஏற்றுமதி செய்யலாம் என்று பல வழிகளை அரசு ஆராயும். ஆனால், இதற்காக பள்ளிக் குழந்தைகளுக்கு மாம்பழச் சாற்றைக் கொடுத்தால் பள்ளிக்

குழந்தைகள் எல்லோருக்கும் இது ஒத்துக்கொள்ளாது. பல குழந்தைகளுக்கு dysentery ஏற்படுகின்ற ஆபத்து இருக்கிறது. ஆகவே, அது உகந்த திட்டம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

**திரு. டி. செங்குட்டுவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு, மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டிலே, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் கொடுத்த திட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மா விவசாயிகள் பயன்பெற ஏதுவாகவும், மாம்பழக் கூழ் உற்பத்தியாளர்கள் பயன்பெறவும், மதிய உணவுத் திட்டத்திலே ஆவின்மூலம் மாம்பழ ஜூஸ்,* Mango Milkshake *ஒரு குழந்தைக்கு 700 மில்லி வீதம் "கிருஷ்மா" மூலம் தயாரித்து வழங்கலாம் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, அது அனைத்து பத்திரிகை ஊடகங்களிலும் வெளிவந்துள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்க்கையில் பல கட்டங்களில் பலவற்றைக் கூறுகிறோம். அதன் பின்னால் அதைப்பற்றி நன்றாகப் புரிந்துகொண்ட பிறகு கருத்தை மாற்றிக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய தினம் மாம்பழச் சாறு வழங்கலாம் என்று நான் நினைத்தேன். அதன்பின் மருத்துவர்கள் கூறிய ஆலோசனைப்படி, இப்படி மாம்பழச் சாறு வழங்கினால் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படும் என்று சொன்னார்கள். அதனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு சத்துணவோடு மாம்பழச் சாறு வழங்க வேண்டும் என்ற கேள்வியையொட்டி, மாண்புமிகு*

2016 ஜூன் 23]

*முதலமைச்சர் அவர்கள் அது குழந்தைகளுக்கு ஒத்துவராது, உடல்நலம் பாதிக்கக்கூடிய சூழ்நிலைகூட ஏற்படும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–15*

*எனவே, மாம்பழச் சாறைப் பொறுத்தவரையில் அந்தப் பிரச்சினை இருந்தாலும், நான் கேட்க விரும்புவது, அதற்குப் பதிலாக சத்துணவு வழங்கக்கூடிய அந்தப் பள்ளி மாணவர்களுக்கு பால் வழங்குகிற திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசிடம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இதற்குத் தனிக் கேள்வி போடலாம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[*குறிப்பு:* *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்–விவாதத்திற்கான பதிலுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மேதகு ஆளுநர் அவர்கள் 16–6–2016 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்களால் முன்மொழியப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்களால் வழிமொழியப்பட்ட தீர்மானத்தின்*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜூன் 23

மீதான விவாதத்தில் அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அனைவருக்கும் எனது நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கருத்துகளுக்கான எனது பதிலுரையை அளிக்க விழைகிறேன்.

"மக்கள் சக்தியை மட்டும் மூலதனமாகக் கொண்ட இயக்கங்கள் மட்டுமே இன்று உருக்குலையாமல், துருப் பிடிக்காமல், தேய்ந்து விடாமல், மாய்ந்து விடாமல், அசைக்க ஒண்ணாத கோட்டைக் கொத்தளமாக புத்தொளி வீசுகிறது" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுப்படி, கடந்த ஐந்தாண்டுக் காலமாக மக்கள் சக்தியை மூலதனமாகக் கொண்டு நாங்கள் ஆட்சி பொறுப்பிலே இருந்தோம். அதனால்தான், மக்கள் என்னைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக ஆக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து மக்களுக்குச் சேவை செய்ய எங்களை அனுமதித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக தமிழக மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23–1–2016 அன்று மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு, நான் பதிலுரை அளித்தபோது நல்ல ஆட்சியின் இலக்கணம் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவுக் கூர்ந்தேன்.

"நல்ல விளக்குக்கு வெளிச்சம் எப்படியோ, நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ, அப்படித்தான் நல்ல மக்களுக்கு நிம்மதி வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நிம்மதியுடன் வாழ வகைசெய்யும் விதமாக பல்வேறு திட்டங்களை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருப்பதை அறிவார்ந்த தமிழக மக்கள் உணர்ந்துள்ளார்கள் என்று நான் அப்போது தெரிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு மக்கள் நிம்மதி பெறும் வகையிலான திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வந்ததால்தான், தமிழக மக்கள் எங்களை மீண்டும்

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையிலான கொள்கைகளைத்தான் ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், "இந்த ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், இது அரசின் உரைதான் என்பது வெளிப்படுகிறது" என்று ஆளுநர் உரை முடிந்தவுடன் தனது முதல் கருத்தாகத் தெரிவித்தார். ஆளுநர் உரை என்பது அரசின் உரைதான். அரசின் கொள்கைகளை எடுத்துக் கூறும் விளக்க உரைதான். இதுதான் ஆளுநர் உரையின் இலக்கணம் என்பதை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியும் இதே சட்டமன்றத்தில் கூறியிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தெரிந்துகொள்வது நல்லது.

முற்பகல் 10—20

1997 ஆம் ஆண்டு ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசியபோது, "கவர்னர் உரை என்பது, அந்த உரையை யார் ஆற்றுகிறார்களோ, அவர்களுடைய உரை அல்ல, இது அரசாங்கத்தினுடைய கொள்கை விளக்க ஏடு" என்று திரு. கருணாநிதி அவர்களே சொல்லியுள்ளார். எனவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு இதில் எவ்விதக் குழப்பமும் வேண்டியதில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தி.மு.க. தலைவர், மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள், "கொள்கைக் குறிப்புகள் எதுவும் இல்லாத வெற்றறிக்கை" என்று கூறியிருக்கிறார். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், "இந்த அரசு என்னவெல்லாம் ஆசைப்படுகிறதோ, அதையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவற்றையெல்லாம் எப்படி நிறைவேற்றுவது என்பது குறித்து எந்த விவரமும், எந்தவித விளக்கமும் அதில் இடம் பெற்றிருக்கவில்லை" என்று சொல்லியுள்ளார். எனவே, கொள்கை அறிவிப்புகள் இருக்கின்றன என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக் கொண்டுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) கவர்னர் உரை என்பது அரசின் கொள்கையை எடுத்துக்கூறும் உரை ஆகும்.

*1967 ஆம் ஆண்டிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்குப் பதில் அளித்துப் பேசியபோது தெரிவித்த கருத்துகளை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.*

*"கவர்னர் உரை என்பது, இந்த சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்களையும் தொகுத்து வெளியிடுகின்ற பெரிய அறிக்கை அல்ல. கோடிட்டுக் காட்டுகிற அறிக்கை. . . கவர்னர் உரையில் கோடிட்டுக் காட்டியிருப்பதை வைத்துக்கொண்டு, அதிலிருந்து நாம் மற்றவற்றை யூகித்துக் கொள்ள வேண்டும்." வெற்றிலைப் பாக்கு போடுகிறீர்களா? என்று கேட்டால், சுண்ணாம்பு தடவாமல் போட்டுக்கொள்ள வேண்டும் என்பது அர்த்தமல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போடுகிறீர்களா? என்று யாரும் கேட்பதில்லை. வெற்றிலைப் பாக்கு போடுகிறீர்களா? என்றுதான் கேட்பார்கள். போட்டுக்கொள்கிறேன் என்பார்கள். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும்தான் வரும். வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவி போட்டுக்கொள்வார்கள். வெற்றிலைப் பாக்குத்தானே போட்டுக்கொள்ளச் சொன்னார்கள்? இதோ வெற்றிலை, இதோ பாக்கு, சுண்ணாம்பு வேண்டாம் என்று யாரும் தள்ளிவிட மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல், கவர்னர் உரையில் இது இல்லை, அது இல்லை. ஆகவே, இதில் எதுவும் இல்லை என்று தள்ளிவிடலாமா? "கவர்னர் உரையில் சில குறிப்பிட்ட விஷயங்கள் இருக்கும். அதோடு தொடர்பாக நாம்தான் மற்ற விஷயங்களை யூகித்துக்கொள்ள வேண்டும்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், பெரும்பான்மையான மக்களின் வாழ்வாதாரமாகவும் விளங்கும் முதன்மைத் துறையான வேளாண் துறைக்கு கடந்த ஐந்தாண்டுகளில் அளித்த முக்கியத்துவத்தைப்போன்றே, மிகுந்த முக்கியத்துவத்தை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து அளிக்கும். வேளாண் துறைக்கும், விவசாயிகளின் வருவாய் அதிகரிப்பதற்கும் என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாகவே 2015–2016

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*ஆம் ஆண்டு உணவு தானிய உற்பத்தி 1 கோடியே, 23 இலட்சத்து, 47 ஆயிரம் மெட்ரிக் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2010–2011 ஆம் ஆண்டில் அன்றைய தி.மு.க. ஆட்சியில் உணவு தானிய உற்பத்தி 75.95 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலேயே இருந்தது. அதாவது, உணவு தானிய உற்பத்தி எங்கள் ஆட்சிக் காலத்தில் 63 சதவிகிதம் அதிகரித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) உணவு தானிய உற்பத்தியில் கடும் வறட்சி நிலவிய 2012–2013 ஆம் ஆண்டைத் தவிர, ஏனைய ஒவ்வோர் ஆண்டும் உயரிய சாதனைகளை எனது தலைமையிலான அரசு படைத்து வந்துள்ளது.*

*முற்பகல் 10–25*

*சாகுபடிப் பரப்பை அதிகரித்தல், விவசாயத்தில் புதிய உத்திகளைக் கையாளுதல், தரமான விதைகள், இதர இடுபொருட்கள் வழங்குதல் என பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டதன் காரணமாகவே இவ்வாறு உணவு தானிய உற்பத்தி ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்துள்ளது.*

*உரங்கள் மற்றும் வேளாண் கருவிகளுக்கு மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. உரங்கள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதற்கு வழிவகை செய்யும் வகையில் உரங்கள் வாங்கி, விற்பனை செய்ய ஏதுவாக* TANFED *நிறுவனத்திற்கு வட்டியில்லா முன் பணம் வழங்கப்பட்டு வருகிறது.*

*தமிழகம் எப்போதும் தண்ணீர் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால் நுண்ணீர்ப் பாசனத் திட்டங்களுக்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவத்தை அளித்து வருகிறது. நுண்ணீர்ப் பாசன அமைப்பை ஏற்படுத்தும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், (மேசையைத் தட்டும் ஒலி) இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் கடந்த 5 ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)*

*குறைந்த வட்டியில் விவசாயக் கடன் வழங்கப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள்மூலம் 23,214 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும் பயிர்க் கடனை, குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி அறவே தள்ளுபடி செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, 811 கோடி*

ரூபாய் அளவிற்கு வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

விவசாயக் கடன் பெற்ற விவசாயிகளின் கடன் சுமையைக் குறைக்கும் வகையில் எங்களது தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதியின்படி கூட்டுறவு வங்கிகளுக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க் கடன், நடுத்தரக் கால வேளாண்மைக் கடன் மற்றும் பண்ணை சார்ந்த நீண்ட காலக் கடன் ஆகிய அனைத்தையும் தள்ளுபடி செய்திட நான் உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

கூட்டுறவு வங்கிகள்மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தொடர்ந்து வழங்கப்படுவதுடன், பயிர்க் கடனை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி செய்யும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பொதுப் பணித் துறையின்கீழ் உள்ள 5,693 ஏரிகளில் தூர் வாருதல், கரையைப் பலப்படுத்துதல், நீரியல் கட்டுமானங்களைச் சீரமைத்தல் போன்ற பணிகள் 2,870 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, அவை புனரமைக்கப்பட்டுள்ளன. *(மேசையைத் தட்டும் ஒலி)* 198 ஏரிகளில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 213 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. 47 தடுப்பணைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 66 உபவடி நிலங்களில் 4,778 ஏரிகளைச் சீரமைத்தல் மற்றும் ஆற்றுப் படுகைகளை மேம்படுத்தி 477 புதிய அணைக்கட்டுகள் மற்றும் தடுப்பணைகள் கட்டுதல் போன்ற பணிகள் உலக வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும். இதற்கென 2,950 கோடி ரூபாய் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருக்கும் வகையில் "முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* சிறு, குறு விவசாயிகள், குத்தகைதாரர்கள், விவசாயத் தொழிலாளர்கள் என அனைவருக்கும் இத்திட்டத்தின்கீழ் பல்வேறு உதவிகள்

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வழங்கப்பட்டு வருகின்றன. இந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 37 இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு 3,044 கோடி ரூபாய் அளவிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. “முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்” தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் கால்நடைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவேதான், கால்நடை மேம்பாட்டிற்கும், பால் உற்பத்திக்கும் முக்கியத்துவம் அளித்து அதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் 830 புதிய கால்நடை மருந்தகங்கள், 200 கிளை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1,406 புதிய கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1,163 கால்நடை மருத்துவ நிலையக் கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ஏழைகளின் வாழ்வாதாரம் பெருகும் வகையிலும், பால் உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும், கடந்த 5 ஆண்டுகளில் 60,000 விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 7 இலட்சம் ஏழையெளிய மகளிருக்கு தலா 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறியாடுகள் விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 5 ஆண்டுகளில் நாளொன்றுக்கு 5.35 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் உயர்த்தப்பட்டுள்ளது. பால் குளிர்விக்கும் அறைகளின் திறன் நாளொன்றுக்கு 7.30 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவை தவிர, நாளொன்றுக்கு 7.30 இலட்சம் லிட்டர் அளவுக்கு பால் குளிர்விக்கும் அறைகள் பல்வேறு பால் பண்ணைகளில் அமைக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலையில் நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் திறனுள்ள பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜூன் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் வளத்தை மேம்படுத்துவதற்கும், மீன் வளத் துறையை நவீனப்படுத்துவதற்கும், நவீனத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் மீனவர்களின் வருவாய் மேம்படச் செய்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு கடந்த 5 வருடங்களில் எடுத்துள்ளது.

நாகப்பட்டினத்தில் தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மற்றும் பொன்னேரி ஆகிய இடங்களில் மீன் வள தொழில்நுட்ப நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீன்பிடித் தடைக் காலம், மீன்பிடிக் குறைக் காலம் ஆகியவற்றின்போது மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. மீனவர்களுக்காக குழுக் காப்பீட்டுத் திட்டத்தில் 50 விழுக்காடு சந்தாத் தொகையை அரசு செலுத்துகிறது. நாட்டுப் படகுகளில் இயந்திரங்கள் வாங்கிப் பொருத்துவதற்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கான டீசலுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டுப் படகுகளுக்கு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில் புதுமைத் திட்டமாக, தொலைதூரக் கடல் பகுதியில் மீன்பிடிக்க ஏதுவாக புதிய சூரை மீன் படகு கட்டுவதற்கு 30 இலட்சம் ரூபாய் வரையிலான 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 5 ஆண்டுகளில் 35 மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 7 மீன்பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், 14 இடங்களில் மீன்பிடி இறங்கு தளங்களும், 3 மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. 5 மீன் பதன பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. கடல் அரிப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் 116 கோடி ரூபாய் செலவில், 37 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற மீனவர் நலன் காக்கும் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*முற்பகல் 10–35*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பொருளாதாரத்திலும், தொழில் உற்பத்தியிலும் ஜவுளித் தொழில் அதிலும் குறிப்பாக, கைத்தறி முக்கியப் பங்கு வகிக்கிறது. கைத்தறித் துறையை மேம்படுத்தவும், நெசவாளர்கள் வாழ்வு வளம் பெறவும் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.*

*நெசவாளர்களுக்கென 10,000 சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மின் மோட்டார் பொருத்தப்பட்ட 6,000 பெடல் தறிகள் வழங்கப்பட்டுள்ளன. மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் 25,000 நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)*

*கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின்சார பாவு சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்கள் தொழில் முதலீடு மற்றும் நடைமுறை மூலதனக் கடன்பெறும் வகையில் நெசவாளர்களுக்கான கடன் அட்டை வழங்கும் திட்டம் 2012–2013 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் நெசவாளர்கள் 2 இலட்சம் ரூபாய் வரை கடன் பெற இயலும். வட்டியில் 3 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.*

*கைத்தறித் துறைக்கும், நெசவாளர்களுக்கும் பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்திய காரணத்தினால்தான் 1,163 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 946 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)*

*எங்களது தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்குக் கட்டணமில்லாமல் 100 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரம் 200 யூனிட்டுகளாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) விசைத்தறி நெசவாளர்களுக்குக் கட்டணமில்லாமல் 500 யூனிட் அளவுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரம் 750 யூனிட்டுகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் விளிம்பில் உள்ள ஏழையெளிய மக்கள் பொருளாதார வளர்ச்சி*

பெற்று, ஏனையோருக்கு இணையாக உயர்வடைய வேண்டும் என்றால் அவர்களின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட வேண்டும். சிறந்த கல்வி அளிக்கப்பட்டால்தான் பொருளாதார வளர்ச்சி அடித்தட்டில் உள்ள மக்களையும் சென்றடையும். கல்வியில் ஏற்படும் வளர்ச்சி சமுதாய வளர்ச்சிக் குறியீட்டை நிர்ணயிக்கும் முக்கியக் காரணியாகும். ஒரு சமுதாயம் வளர்ச்சி அடைந்த சமுதாயமாக கருதப்பட வேண்டும் எனில், மனித வளக் குறியீடுகள் வளர்ச்சி அடைய வேண்டும். எனவேதான், கல்வி வளர்ச்சிக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அனைவருக்கும் தரமான கல்வி வழங்கிட வேண்டுமெனில் பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும். போதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். மாணவ, மாணவியரின் இடைநிற்றலைக் குறைத்திட வேண்டும். மாணாக்கர்களின் கற்கும் திறன் உயர்த்தப்பட வேண்டும். இவற்றையெல்லாம் நிறைவேற்றிட வேண்டும் என்ற காரணத்தால்தான் பல புதிய திட்டங்களை எனது தலைமையிலான அரசு கடந்த 5 ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகிறது.

மாணவ, மாணவியருக்கு 4 இணைச் சீருடை, விலையில்லா பாட நூல்கள், (மேசையைத் தட்டும் ஒலி) விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டிகள், (மேசையைத் தட்டும் ஒலி) கிரையான்ஸ், நில வரைபடப் புத்தகம் ஆகிய கல்வி உபகரணங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் இணைக் காலணிகள், விலையில்லா மிதி வண்டிகள், கட்டணமில்லாப் பேருந்துப் பயணச் சலுகை, சத்தான மதிய உணவு ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக் கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 10 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மொத்தம் 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக 2010–2011 ஆம் ஆண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலிருந்து 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய மாணாக்கர்களின் எண்ணிக்கை 5,11,090

2016 ஜுன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

என இருந்த நிலையில் இந்த ஆண்டு இது 5,46,233 என உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–40

தொடக்கக் கல்வியில், 2010–2011 ஆம் ஆண்டில் 99.60 ஆக இருந்த நிகர சேர்க்கை விகிதம், 2015–2016–ல் 99.85 ஆக உயர்ந்துள்ளது (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோன்று, நடுநிலை வகுப்புகளில் 2010–2011 ஆம் ஆண்டில் 98.84 என இருந்த நிகர சேர்க்கை விகிதம் 2015–2016 ஆம் ஆண்டில் 99.11 என உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, இடைநிலைக் கல்வியில் 2010–2011–ல் 82.30 ஆக இருந்த மொத்த சேர்க்கை விகிதம் 2015–2016–ல் 93.15 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேல்நிலைக் கல்வியில் 2010–2011–ல் 55.92 ஆக இருந்த மொத்த சேர்க்கை விகிதம் 2015–2016–ல் 77.64 ஆக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, இடைநிலை அளவில் 2010–2011–ல் 11.21 ஆக இருந்த இடைநிற்றல் விகிதம் 2015–2016–ல் 3.76 என கணிசமாகக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்விக்கென எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடித் திட்டங்கள் அனைத்தும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்விக்கு, அளித்து வரும் அதே அளவு முக்கியத்துவத்தை உயர் கல்விக்கும் எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில், 15 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 11 அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 4 அரசு பொறியியல் கல்லூரிகள் என 54 புதிய கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இவையன்றி, ஸ்ரீரங்கத்தில் இந்திய தகவல் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் தேசிய சட்டப் பள்ளி ஆகியவை துவக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், உயர் கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை இந்திய அளவில் 23.6 சதவிகிதம் என உள்ள நிலையில், தமிழ்நாட்டில் இது, 44.8 சதவிகிதம் என உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) உயர் கல்விக்கு உயரிய முக்கியத்துவத்தை எனது அரசு தொடர்ந்து அளிக்கும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜூன் 23

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித வள மேம்பாட்டில் முக்கியப் பங்கு வகிப்பது மக்களின் உடல் நலன் ஆகும். மக்கள் நல்ல உடல் நலன் பெற்று, நல்வாழ்வு அமையப் பெற்றால்தான் சிறந்த வளர்ச்சியை நாம் எய்த இயலும். எனவேதான், மக்கள் நல்வாழ்வுக்கு உரிய முக்கியத்துவத்தை எனது தலைமையிலான அரசு அளித்து வருகிறது. ஏழை மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டாலும், அதன் முழுப் பயனும் அவர்களைச் சென்றடைய வேண்டுமெனில், சிறந்த உடல்நலன் பேணுவதற்கான வசதிகள் செய்து தரப்பட வேண்டும். உடல்நலக் குறைவு காரணமாகப் பணி செய்ய இயலாத நிலையைத் தவிர்க்க ஏழைகளுக்கும் தரமான மருத்துவ வசதிகள் செய்து தரப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டுதான் 2011 ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே ஒரு புதிய விரிவாக்கப்பட்ட காப்பீட்டுத் திட்டம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்திற்கு, 4 ஆண்டுகளில், 4 இலட்சம் ரூபாய் வரை தனியார் மருத்துவமனைகளிலும், அரசு மருத்துவமனைகளிலும் சிகிச்சைப் பெற இயலும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 10–45*

*கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்யும் வகையிலும், கர்ப்ப காலத்தில் தேவைப்படும் சத்தான உணவை உட்கொள்ளும் வகையிலும், அரசு மருத்துவமனைகளில் குழந்தையை ஈன்றெடுக்கும் வகையிலும், தடுப்பூசிகள் போடப்பட்டு குழந்தைகள் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதை உறுதி செய்யும் வகையிலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பெண்களின் சுகாதாரத்தைப் பேணும் நோக்கத்துடன் கிராமப்புற வளர் இளம் பெண்களுக்கு விலையில்லா சானிடரி நாப்கின்கள் வழங்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)*

*கிராமப் பகுதிகளில் வாழும் அனைத்து மக்களும் தரமான மருத்துவ வசதி பெற வேண்டும் என்ற அடிப்படையில் 187 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள்*

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 129 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 15 ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ளன என்ற நிலை ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

260 ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள் நோயாளிகள் பிரிவு, புற நோயாளிகள் பிரிவு, அறுவை அரங்கம், பிரசவ அறை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்பும் வகையில், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இணையாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 16 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய ‘அம்மா குழந்தை நலப் பரிசு பெட்டகம்’ வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கருவுற்றத் தாய்மார்களுக்கு அவர்கள் உடல் நலத்தைப் பேணும்வகையில் ‘அம்மா மகப்பேறு சஞ்சீவி’ வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் உடல் நலன் காக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் காரணமாகத்தான் அன்றைய தி.மு.க. ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு 1,000 குழந்தை பிறப்புகளுக்கு 24 என இருந்த குழந்தை இறப்பு விகிதம், தற்போது 21 ஆகக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2010 ஆம் ஆண்டு, 27

என இருந்த 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம் 23 எனக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2010 ஆம் ஆண்டு தாய் இறப்பு விகிதம் 1 இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 79 என இருந்தது, தற்போது 67 ஆகக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்வாழ்வுக் குறியீடுகள் இன்னும் மேன்மையடைய நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உயரிய சுகாதார வசதிகள் வழங்கும் கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடன், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை கடன் உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற மருத்துவக் கட்டமைப்புத் திட்டம் 1,634 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு முதல் 17 நகரங்களில் உள்ள 21 அரசு மருத்துவமனைகளில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*முற்பகல் 10—50*

பல்வேறு நோய்களுக்கும் அறுவை சிகிச்சைகளுக்கும் இரத்தம் இன்றியமையாததாகும். தமிழ்நாட்டில் 288 இரத்த வங்கிகளும், 434 இரத்த சேமிப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. இரத்த வங்கிகள் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளை மேம்படுத்த சென்னையில் மெட்ரோ இரத்த வங்கி என்ற ஒப்புயர்வு மையத்தை 202 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவி செயல்படுத்த எனது தலைமையிலான அரசு மத்திய அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதுபோன்ற மையம் இந்தியாவிலேயே புது டெல்லி மற்றும் சென்னை ஆகிய 2 இடங்களில் மட்டுமே அமைய உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவதும், பொருளாதார மேம்பாட்டுக்கும், தொழில் வளர்ச்சிக்கும் ஏற்ற சூழலை அளிப்பதும், அடிப்படை வசதிகளை அனைவரும் பெறுவதற்கும் இன்றியமையாததாக விளங்குவது உட்கட்டமைப்பு வசதிகளாகும். உட்கட்டமைப்பு வசதிகளை நகரங்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் ஏற்படுத்த பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு கடந்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தியுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*நெடுஞ்சாலைத் துறைமூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் 211.44 கோடி ரூபாய் செலவில் 68.11 கி.மீ. நீளமுள்ள 13 புறவழிச் சாலைகள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 19,190.52 கோடி ரூபாய் செலவில் 46,890.50 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 1,793 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் 3,067.30 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 10,298 கோடி ரூபாய் செலவிலான பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*புதிய சாலைகளை அமைத்தல், சாலைகளை அகலப்படுத்துதல், புறவழிச் சாலைகளை அமைத்தல், இரயில்வே மேம்பாலங்கள், பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் 3,989 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4,492 கி.மீ. சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 3,390 கி.மீ. பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தில் உள்ள இதர நகராட்சிகளில் குடிநீர் விநியோகம், பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலைகள், மழைநீர் வடிகால், திடக் கழிவு மேலாண்மை ஆகியவற்றிற்கான 9,619 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24,231 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று பேரூராட்சிகளில் 3,625 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 20,751 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் 8,943 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, சென்னை பெருநகரப் பகுதியில் 4,987 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்துக் குடியிருப்புகளுக்கும் தேவையான அளவு குடிநீர் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*முற்பகல் 10–55*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்ட 'தாய் திட்டம்' செயல்படுத்தப்பட்டு*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜூன் 23

வருகிறது. குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், சாலைகள், சுடுகாடு/இடுகாடு, சுடுகாடு/இடுகாட்டிற்கு சாலை வசதிகள் ஆகியவை குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகள் என வரையறுக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மொத்தமுள்ள 79,394 குக்கிராமங்களில் இந்த வசதிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கன்வாடி மையம், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம் அமைத்தல் போன்ற இதர பணிகளும் குக்கிராமங்களில் செயல்படுத்தப்படும்.

கடந்த 5 ஆண்டுகளில் 16,320 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 17,638 மூன்று சக்கர மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 9,000 ஊராட்சிகளில் தூய்மைக் காவலர்கள் நியமிக்கப்பட்டு, திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்கள், விரிவுபடுத்தப்பட்டு அனைத்துக் கிராமங்களும் தூய்மைக் கிராமங்களாக ஆக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, இருண்ட தமிழகம் ஒளிமயமாக்கப்படும் என்ற வாக்குறுதியை நான் அளித்திருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு தமிழகம் ஒளிமயமாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று மின் வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டு மின் உபயோகிப்பாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், சிறு தொழில் நிறுவனங்கள், பெரும் தொழில் நிறுவனங்கள், அதிக அளவு மின்சாரம் தேவைப்படும் பெரிய தொழிற்சாலைகள், வணிக இடங்கள் என அனைவருக்கும் எவ்வித தங்குதடையுமின்றி தரமான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2015 ஜூன் மாதம் முதல் மின் வெட்டு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் மிகக் கடுமையான மின் கட்டுப்பாட்டு முறைகளை அப்போதைய தி.மு.க. அரசு கொண்டு வந்தது. உயர் அழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*மின் பயனீட்டாளர்களுக்கு 40 விழுக்காடு மின் வெட்டு; இவர்களுக்கு மாலை 6 மணி முதல் 10 மணி வரை 95 சதவிகிதம் மின் வெட்டு. குறைவழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் பயனீட்டாளர்களுக்கு 20 விழுக்காடு மின் வெட்டு; இவர்களுக்கு மாலை 6 மணி முதல் 10 மணி வரை 95 சதவிகிதம் மின் வெட்டு. பொது மக்களுக்கு நினைத்த நேரத்தில் எல்லாம் மின் வெட்டு என்ற நிலை ஏற்பட்டது.*

*2011 ஆம் ஆண்டு மீண்டும் எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் பல்வேறு மின் திட்டப் பணிகளை விரைந்து முடித்ததோடு, வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் கொண்டுவரப்பட வேண்டும் என்றால் அதற்கான மின் வழித் தடம் வேண்டும். வட மாநிலங்களிலுள்ள மின்சாரத்தை இங்கே பெறுவதற்கு வகைசெய்யும் விதமாக மின் வழித் தடங்கள் அமைத்திட எனது தலைமையிலான அரசு வலியுறுத்தியதன் காரணமாகவே மகாராஷ்டிரா மாநிலம், சோலாப்பூரிலிருந்து திருவலம் இடையேயும் மற்றும் நரேந்திரா—கோலாப்பூர் இடையே 765 கிலோ வோல்ட் திறன்கொண்ட மின் வழித் தடங்கள் அமைக்கப்பட்டு அதன்மூலம் நாம் மின்சாரம் பெற முடிகிறது. இங்கே நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மத்திய அரசு திட்டங்களிலிருந்து நமக்கான பங்கு, நீண்ட கால மற்றும் நடுத்தர கால மின் கொள்முதல் ஒப்பந்தங்களின்மூலம் பெறப்படும் மின்சாரம், சூரிய ஒளி மின்சாரம் ஆகியவற்றின்மூலம் மொத்தம் 8,432.5 மெகா வாட் மின்சாரம் கடந்த 5 ஆண்டுகளில் கூடுதலாக நாம் பெற்று வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 5 ஆண்டுக் காலத்தில் 8,432.5 மெகா வாட் மின்சாரம் கூடுதலாகப் பெறப்பட்ட ஒரு வரலாற்றுச் சாதனையை நாங்கள் நிகழ்த்தியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மின் வெட்டு என்பது அறவே இல்லை என்ற நிலையை நாம் எய்தியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், தனியாரால் இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தமிழகத்தில்தான் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடும் 1–6–2016 முதல் நீக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–00*

*அடுத்த 5 ஆண்டுகளில் 13,000 மெகா வாட் அனல் மின் திறனும், 3,000 மெகா வாட் சூரிய ஒளி மின் திறனும் கொண்ட அலகுகள் கூடுதலாக நிறுவப்பட்டு, தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் மேலும் அதிகரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தொழில் துவங்க ஏற்றதாக உள்ள முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிலாளர் திறன், உட்கட்டமைப்பு, பொருளாதாரச் சூழ்நிலை, நிருவாக ஆளுமை ஆகியவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது, தமிழ்நாடு முன்னணியில் இருப்பதாகப் பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவிலேயே மகாராஷ்டிராவை அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழகம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மகாராஷ்டிரா மாநிலம் தமிழகத்தைவிட இரண்டு மடங்கு பெரிய மாநிலமாகும். அதற்கு அடுத்த மாநிலமாகத் தமிழகம் இருப்பது பெரிய சாதனை. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதல் மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதல் மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் பதிவு செய்வதில் தமிழ்நாடு முதல் மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறையில் நிகர மதிப்புக் கூட்டல்படி தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. தொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களின் மொத்த வருவாய் மதிப்பில் மூன்றாம் இடத்தில் தமிழகம் உள்ளது. மொத்த ஏற்றுமதியில் மூன்றாம் இடம் என தமிழகம் உள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறுவதில் தமிழகம் முன்னிலையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2000 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான 11 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொகையைவிட, இரு மடங்கு அளவில் கடந்த ஐந்தாண்டுகளில் கிடைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*தமிழ்நாட்டில் முதன்முதலாக உலக முதலீட்டாளர் மாநாடு 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடத்தப்பட்டது. இதில் 2,42,160 கோடி ரூபாய் முதலீடு செய்ததற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)*

இதில் 54 நிறுவனங்கள்மூலம் 23,258 கோடி ரூபாய் முதலீடுகள் செய்யப்பட்டு, பலர் வேலைவாய்ப்புகள் பெற்றுள்ளனர். மற்ற நிறுவனங்கள் நிலம் கையகப்படுத்துவது, நிதி ஆதாரங்களைப் பெறுவது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன. விரைவிலேயே இவையும் தங்கள் தொழில்களை நிறுவ நடவடிக்கைகளை எடுத்துவிடும்.

இந்த முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுவதற்கு முன்பே 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் 31,706 கோடி ரூபாய் முதலீடுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. வழிகாட்டும் மையம்மூலம் 57 திட்டங்களில் 6,036 கோடி ரூபாய் ஈர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் 5,97,395 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துவங்கப்பட்டுள்ளன. இந்தத் தொழில் நிறுவனங்களில் 1,00,101 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், 2006 முதல் 2011 வரையிலான தி.மு.க. ஆட்சியில் முதலீடு செய்யப்பட்டது 15,906 கோடி ரூபாய் மட்டும்தான். அப்போதைய தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் 1,78,160 தான். கடந்த 5 ஆண்டுகளில் 14 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் 470 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், ஒரு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,059 தொழில் நிறுவனங்கள் தொழில் துவங்க அனுமதி அளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதி நீர்ப் பிரச்சினைகளில் எனது தலைமையிலான அரசு உரிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்கும். முல்லைப் பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தவரை உச்ச நீதிமன்றத்தில் நமக்கு சாதகமான, நியாயமான தீர்ப்பினைப் பெற்றதன் அடிப்படையில் 35 ஆண்டுகளுக்குப் பிறகு (மேசையைத் தட்டும் ஒலி) 21–11–2014 அன்று முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி வரை நீர்

தேக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டும் 142 அடி வரை நீர் தேக்கப்பட்டது.

புதிய முல்லைப் பெரியாறு அணை கட்டுவதற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்ள கேரள அரசுக்கு மத்திய அரசு அளித்திருந்த அனுமதியை எனது தொடர் வற்புறுத்தலினால் மத்திய அரசு நிறுத்தி வைத்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணையின் நீர்த்தேக்க அளவான 152 அடிக்கு நீரைத் தேக்கிடத் தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்துள்ளது. மத்திய நீர்வளக் குழுமத்தின் திருப்திக்கு அணையை வலுப்படுத்திய பின்னர், உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தனிப்பட்ட வல்லுநர்கள் பரிந்துரையைப் பெற்று, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம், அதன் முழு நீர்த்தேக்க அளவான 152 அடிக்கு உயர்த்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நதி நீர்ப் பிரச்சினையில் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணை 5–2–2007 அன்று பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும், தி.மு.க. அங்கம் வகித்த முந்தைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு இந்த இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடவில்லை. தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக மத்திய அரசு 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை வெளியிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எனினும், இதனை நடைமுறைப்படுத்த தேவையான காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை முந்தைய காங்கிரஸ் கூட்டணி அரசாலும் அமைக்கப்படவில்லை, தற்போதைய மத்திய, பாரதிய ஜனதா அரசாலும் அமைக்கப்படவில்லை. இவை அமைக்கப்பட வேண்டுமென நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன்.

8–1–2016 அன்று மத்திய நீர்வளத் துறை அமைச்சர் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைப்பது குறித்து மத்திய சட்டம் மற்றும் நீதித் துறையுடன் கலந்து ஆலோசித்து வருவதாகத் தெரிவித்துள்ளார். கடந்த 14–6–2016 அன்று

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை புதுடெல்லியில் சந்தித்து அளித்த கோரிக்கைகள் அடங்கிய மனுவில் மீண்டும் இந்தக் கோரிக்கையை வைத்துள்ளேன்.

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை அமைக்கப்பட வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் எனது தலைமையிலான அரசால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

உச்ச நீதிமன்றம் நீண்ட கால நிலுவையிலுள்ள வழக்குகளை விசாரிப்பதற்காக சிறப்பு அமர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில், காவேரி நதி நீர்ப் பிரச்சினையும் ஒன்றாகும். உச்ச நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வின்முன் காவேரி-பிரச்சினை சம்பந்தப்பட்ட வழக்குகள் 28–3–2016 அன்று விசாரணைக்கு வந்தபோது, உச்ச நீதிமன்றம் இவ்வழக்குகளை 19–7–2016 அன்று பட்டியலிடும்படி ஆணையிட்டுள்ளது. இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் வரும்பொழுது காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்க வலியுறுத்தப்படும். இதில் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம்–ஒழுங்கைப் பொறுத்தவரை தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டம்–ஒழுங்கைப் பாதிக்கச் செய்யும் நிகழ்வுகளிலும், குற்றத் தடுப்பு, புலனாய்வு ஆகிய காவல் பணிகளிலும் காவல் துறையினருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் பொது அமைதி பாதுகாக்கப்படுகிறது. பொது அமைதிக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், குற்ற நிகழ்வுகளே இல்லையென்ற நிலையை எய்திட இயலாது. மக்கள்தொகை அதிகரிப்பு, வளர்ந்துவரும் பொருளாதாரம், தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம், மாறிவரும் சமுதாயச் சூழ்நிலை மற்றும் நகரமயமாதல் ஆகியவற்றால் குற்ற நிகழ்வுகள் ஒவ்வோர் ஆண்டும் அதிகரிக்கும் என்பதுதான் உலகெங்கும் பொதுவான நடைமுறை என்றாலும், எனது தலைமையின்கீழ் காவல் துறையினரின் சிறப்பான பணிகளின் காரணமாக, தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகள் குறைந்து வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜூன் 23

*2010 ஆம் ஆண்டு 1,715 என இருந்த கொலைகளின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டு 1,641 எனக் குறைந்துள்ளது. அதுபோலவே, ஆதாயக் கொலை வழக்குகள் 30.07 சதவிகிதமும், கொள்ளை வழக்குகள் 2.97 சதவிகிதமும், களவு வழக்குகள் 23.22 சதவிகிதமும், கொலை வழக்குகள் உள்ளிட்ட சொத்து சம்பந்தமான வழக்குகள் 13.60 சதவிகிதமும் குறைந்துள்ளன. குற்ற நிகழ்வுகளைப் பொறுத்தவரை, குற்ற விகிதம் எவ்வளவு எனக் கணக்கிடப்படுகிறது. ஒரு இலட்சம் மக்கள்தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்ற எண்ணிக்கைதான் குற்ற விகிதம் ஆகும். 2010 ஆம் ஆண்டு தாக்கலான இந்திய தண்டனைச் சட்ட குற்றங்களின் குற்ற விகிதம் 277.08 என இருந்தது. 2015 ஆம் ஆண்டு இந்தக் குற்ற விகிதம் எனது ஆட்சியில் 244.38 எனக் குறைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, குற்றங்களின் எண்ணிக்கை எனப் பார்த்தாலும், குற்ற விகிதம் எனப் பார்த்தாலும், அன்றைய தி.மு.க. ஆட்சியுடன் ஒப்பிடும்போது இவை குறைந்தே உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு திரு. கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டதுபற்றியும், அதனைத் தடுக்க திரு. கருணாநிதி தவறிவிட்டது பற்றியும் விரிவாக நான் இந்த மாமன்றத்தில் 20–6–2016 அன்று எடுத்துக் கூறினேன். 21–6–2016 அன்று திரு. கருணாநிதி ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், கச்சத் தீவை தாரை வார்க்க தான் எந்தக் காலத்திலும் ஒப்புக்கொண்டதுமில்லை, உடன்பட்டதுமில்லை என்று தெரிவித்துள்ளார். 2013 ஆம் ஆண்டு மே மாதம் டெசோ அமைப்பின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் இது தொடர்பாக மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.*

*முற்பகல் 11–15*

*இது தொடர்பாக நான் கேட்கும் கேள்விகள் என்னவென்றால்;*

*1. 1974 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் தேதி திடீரென்று அறிவிப்பு வந்தவுடன்தான் அதுபற்றித் தெரியும் என்று சொன்னதும், 15–4–2013 அன்று டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தி.மு.க. அரசு வலியுறுத்திதான் சில ஷரத்துக்கள்*

ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டன என்று கூறுவதும் ஒன்றுக்கொன்று முரண்பாடானதில்லையா? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சில ஷரத்துக்கள் சேர்க்கும்படி சொல்லப்பட்டது என்றாலே, தாரை வார்க்க ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பதுதானே பொருள்? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்
திரு. ஜெ. அன்பழகன் மற்றும் திரு. ப. ரங்கநாதன்
ஆகியோர் எழுந்து நின்றனர்)

2. (குறுக்கீடுகள்) நான் இந்தக் கேள்விகளை திரு. கருணாநிதி அவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்லட்டும், நீங்கள் அமருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) I am not yielding.

இரண்டாவது கேள்வி; அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சமாதானம் செய்து, (குறுக்கீடுகள்) பதில் சொல்ல முடியவில்லை என்றால், கூச்சல் போடுவதா? (குறுக்கீடுகள்) பதில் சொல்ல முடியவில்லை என்றால், கூச்சல் போடுவதால் என்ன ஆகப்போகிறது? (குறுக்கீடுகள்) உங்கள் தலைவர் பதில் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) உங்கள் தலைவர், உங்கள் தலைவர்தானா? அல்லது இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்தான் உங்கள் தலைவரா? (குறுக்கீடுகள்) கூச்சல் போடுவதால் ஒன்றும் ஆகப்போவதில்லை. நான் கேட்கும் கேள்விகளைக் கேட்டே தீருவேன். (குறுக்கீடுகள்) எனக்குப் பேச அனுமதி தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் யார் பேச வாய்ப்புக் கேட்கிறார்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர் பேசி முடிக்கிற வரையில் குறுக்கீடு எதையும் நான் அனுமதிக்க முடியாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தலைவர், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி இந்த அவையின் உறுப்பினர். அவர் இங்கே வந்து பதில் சொல்லியிருக்கலாம். அதைவிட்டுவிட்டு வெளியே அறிக்கை கொடுத்துக் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அந்த அறிக்கையைப் பற்றித்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களால் முடியவில்லை என்றால் உட்காருங்கள். அறிக்கை கொடுத்தவரே இதற்கு பதில் சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது இதுபோன்று குறுக்கீடு செய்வது சரியல்ல. (குறுக்கீடுகள்) அவர் முடித்தவுடன் வாய்ப்புத் தருகிறேன். பின்னர் பார்க்கலாம். இதுபோன்று எல்லோரும் எழுந்து நின்று பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடிக்கின்ற வரை அனைவரும் பொறுமையாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது குறுக்கீடு எதையும் நான் அனுமதிக்க முடியாது. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் யாரையும் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் தெளிவாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், எந்தவிதமான குறுக்கீடும் இப்போது இல்லை. உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடிக்கின்றவரை குறுக்கீட்டிற்கு அனுமதி அளிக்கவில்லை, (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள் பேசி முடிக்கின்றவரை, குறுக்கிடுவதற்கு யாருக்கும் நான் அனுமதி அளிக்கவில்லை. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், நான் நிற்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) உங்களுக்கு பேரவையின் விதி தெரியும் அல்லவா? (குறுக்கீடுகள்) தி.மு.க. உறுப்பினர்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவராகிய நான் நிற்கிறேன்; நீங்கள் உட்காரமாட்டேன் என்கிறீர்களே? விதி என்ன சொல்கிறது? நீங்கள் பேரவை விதியைக்கூட*

2016 ஜூன் 23] [பேரவைத் தலைவர்]

*மதிக்கமாட்டேன் என்கிறீர்களே? (குறுக்கீடுகள்) விதியை மதிக்கமாட்டேன் என்கிறீர்களே? நான் நேற்றே உங்கள் எல்லோருக்கும் அறிவுரை சொல்லியிருக்கிறேன். உறுப்பினர்கள் அனைவருக்கும் பேரவை விதி தொடர்பான புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த விதிப் புத்தகத்தை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, அந்த விதிகளின்படி இந்த அவையை நடத்த ஒத்துழைப்புத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறேன். நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேசுகின்றபோது நான் எந்தக் குறுக்கீட்டையும் அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) நான் எந்தக் குறுக்கீட்டையும் அனுமதிப்பதாக இல்லை; அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடுகள்) அமைதியாக இருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உரையை முழுமையாகக் கேட்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முக்கியமான பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. துரைமுருகன், நான் உங்களைப் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் பொறுமையாகக் கேளுங்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சில நிமிடங்களில் எனது பதிலுரையை நான் முடித்துவிடுவேன். அதன் பின்னர் அவர்கள் என்ன பேச விரும்பினாலும் தாங்கள் அனுமதிக்கலாம். (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், இவ்வளவு பெருந்தன்மையாக, (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். இவ்வளவு பெருந்தன்மையாக மாண்புமிகு அம்மா அவர்கள், (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (கூச்சல்—குழப்பம்)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *என்னைப் பேசி முடிக்க விடுங்கள். உரை முடியப்போகிறது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பெருந்தன்மையாக "நான் பேசி உரையை முடித்துவிடுகிறேன், அதன் பிறகு நீங்கள் எதை*

வேண்டுமானாலும் கேட்கலாம்” என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு திரு. துரைமுருகன், நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** இன்னும் என்னென்ன வருமோ என்று அவர்களுக்குப் பயம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இதுவரையில் ஒரு கேள்வியைத்தான் கேட்டிருக்கிறேன். இன்னும் நான் நிறைய கேள்விகளை வைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) என்ன வருமோ என்கிற பயத்தினால்தான் தாங்கள் இப்படி இடையூறு செய்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க முடியாது. மாண்புமிகு அம்மா அவர்களது உரை முடியட்டும். (குறுக்கீடுகள்) இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் உரையை முடித்துவிடுகிறேன். அதன் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) என்னைப் பேசி முடிக்கவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனது உரையை முடித்ததற்குப் பின்னால் ஏதாவது கேட்பதாக இருந்தால் கேட்கலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்களே சொன்னதற்குப் பின்னர், நீங்கள் இவ்வாறு செய்வது முறையல்ல. உட்காருங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் உரை நிறைவுற்ற பிறகு எது பேசவேண்டுமானாலும் பேசலாம். (குறுக்கீடுகள்) இப்போது அனுமதிக்க முடியாது. நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுப்பேன். நான் நடவடிக்கை எடுத்து விடுவேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், இது முறையல்ல. முதலமைச்சர் சொன்னதற்குப்பிறகு நீங்கள் எழுந்து நின்று பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேசியதற்குப் பின்பு வாய்ப்புத் தருகிறேன் என்கிறேனே? (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர்தான் அனுமதி தருகிறேன் என்று சொல்கிறாரே? அதன்பிறகு என்ன? (குறுக்கீடுகள்) என்னைப் பேசி முடிப்பதற்கு விடமாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் உட்காருங்கள், நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். மாண்புமிகு அம்மா அவர்களே சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) அவர்களது உரை முடிந்ததற்குப் பின்னால் உங்களுக்குச் சந்தேகங்கள் ஏதாவது இருந்து அதைக் கேட்டால், வாய்ப்பளிக்கிறோம் என்று சொல்லிவிட்டோம். (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு இப்போது பேச எதுவுமில்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *தங்களுக்குப் பிறகு பேசுவதற்கு அனுமதி தரப்போகிறேன் என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள். . . (கூச்சல்–குழப்பம்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)*

*மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், விளக்கம் கேட்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேசியதற்குப் பின்னாலே, வாய்ப்புத் தரலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்களே சொல்லிவிட்டார்கள். நானும் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பின்னாலே,*

(குறுக்கீடுகள்) வேண்டுமென்றே மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதிலுரை ஆற்றுகின்றபோது, குழப்பம் விளைவிக்க வேண்டுமென்று இன்றைக்குத் திட்டமிட்டு அவைக்கு வந்து, இதுபோன்று வெளிநடப்புச் செய்வதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர்களுக்கு என்னுடைய கண்டனத்தை நான் பதிவு செய்கிறேன். இது நல்ல முன்னுதாரணமல்ல. அவர்கள் செய்ததை நான் மீண்டும் மீண்டும் வன்மையாகக் கண்டிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பதிலுரையைத் தொடர்வார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 1½ மணி நேரம் இதுவரை எதிர்க்கட்சி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அமைதியாக அமர்ந்து எனது உரையைக் கேட்டார்கள். ஆனால் கச்சத் தீவு என்று சொன்னவுடனே அவர்களால் பதில் சொல்ல முடியாது என்பது தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவைப் பற்றி சில கேள்விகளை நான் எழுப்ப விரும்புகிறேன் என்று சொன்னவுடன் ஓட்டம் பிடித்துவிட்டார்கள். இதைத்தான் எதிர்பார்த்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) பதில் சொல்ல முடியவில்லை என்றால், கச்சத் தீவைப் பற்றி நான் பேசினால், முதலில் கூச்சல் போட வேண்டியது, அதன் பின்னர் அந்தக் கூச்சலால் இங்கே எதையும் தடை செய்ய முடியவில்லை என்றதும், ஓட்டம் பிடிக்க வேண்டியது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–25*

ஒன்றை நான் அனைவருக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கச்சத் தீவு பிரச்சினைப் பற்றி கடந்த 20 ஆம் தேதி அன்று நான் இங்கே சில கருத்துகளைத் தெரிவித்தேன். அதற்கு தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் இந்த அவைக்கு வெளியே ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். 21 ஆம் தேதியன்று தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் கச்சத் தீவைப் பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அனைவருக்கும் நான் நினைவுபடுத்த விரும்புவது, திரு. மு. கருணாநிதி அவர்கள் இந்த அவையின் உறுப்பினர் ஆவார். சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவருக்கு இந்த அவைக்கு வருவதற்கு எல்லா உரிமையும் உண்டு. அவர் இந்த அவைக்கு வந்திருக்கலாம்; அவருடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கலாம். நான் கேட்கும் கேள்விகளுக்கு அவரே இங்கே

*பதில் அளித்திருக்கலாம். ஆனால், அவர் இங்கே வராமல், வெளியில் இருந்துகொண்டு அறிக்கை விடுகிறார். திரு. கருணாநிதி விட்ட அறிக்கை தொடர்பாகத்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் கேட்கின்ற கேள்விகள் திரு. கருணாநிதி அவர்களைப் பார்த்துத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பதில் சொல்ல வக்கிருந்தால், இங்கே இருந்த தி.மு.க. உறுப்பினர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பதில் சொல்ல வக்கில்லை என்றால், அவர்களுடைய தலைவரை இங்கே அழைத்து வர வேண்டும் பதில் சொல்வதற்கு. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குத் தலைவர் யார் என்ற குழப்பம் வேறு. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்களுடைய தலைவர் யார்? தி.மு.க. தலைவர் என்று குறிப்பிடுகின்ற திரு. கருணாநிதியா அல்லது இங்கே அமர்ந்திருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரா? (மேசையைத் தட்டும் ஒலி) யார் தலைவர் என்பதிலேயே குழப்பம். அந்தத் தலைவர் திரு. கருணாநிதி வேண்டுமென்றால் இந்த அவைக்கு வரலாம்; பதில் சொல்லலாம். இவர்களுக்குக் கச்சத் தீவைப் பற்றி எதுவும் தெரியாது என்றால், பேசாமல் இருக்கலாம். எப்படி முதல் அறிக்கையை திரு. கருணாநிதி வெளியில் இருந்துகொண்டு விட்டாரோ, அதேபோலவே, இன்று நான் எழுப்பும் கேள்விகளுக்கும் திரு. கருணாநிதியே பதில் சொல்லட்டும் என்று விட்டுவிடலாம். ஆனால், அதற்கு மாறாக, கச்சத் தீவு என்று சொன்னவுடனேயே ஓட்டம் பிடித்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்க வேண்டிய கேள்விகளை இப்போது நான் கேட்டு முடிக்கிறேன்.*

*21–6–2016 அன்று திரு. கருணாநிதி ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கச்சத் தீவை தாரை வார்க்க தான் எந்தக் காலத்திலும் ஒப்புக் கொண்டதும் இல்லை; உடன்பட்டதும் இல்லை என்று தெரிவித்துள்ளார். 2013 ஆம் ஆண்டு, மே மாதம் டெசோ அமைப்பின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் இது தொடர்பாக மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நான் கேட்கும் கேள்விகள் என்னவென்றால்,*

*1. 1974 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 27 ஆம் தேதி திடீரென்று அறிவிப்பு வந்தவுடன்தான் அதுபற்றி தெரியும் என்று சொன்னதும், 15–4–2013 அன்று டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட*

*தீர்மானத்தில் தி.மு.க. அரசு வலியுறுத்திதான் சில ஷரத்துக்கள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டன என்று கூறுவதும், ஒன்றுக்கொன்று முரண்பாடானதில்லையா? சில ஷரத்துக்கள் சேர்க்கும்படி சொல்லப்பட்டது என்றாலே, தாரை வார்க்க ஒப்புதல் அளிக்கப்பட்டது என்பதுதானே பொருள்? (மேசையைத் தட்டும் ஒலி)*

*2. அப்போதைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சமாதானம் செய்து பல உரிமைகளுக்கு வழி வகுக்கப்பட்டன என்று தனது அறிக்கையில் திரு. கருணாநிதி கூறியிருப்பதிலிருந்தே, கச்சச் தீவு தாரை வார்ப்பதற்கு அவர் ஒப்புக் கொண்டார் என்றுதானே பொருள்? (மேசையைத் தட்டும் ஒலி)*

*3. ஜன சங்கத் தலைவர் திரு. வாஜ்பாய் அவர்கள் இதுபற்றி வழக்குப் போடப்படும் என்று தெரிவித்தும், தமிழக அரசு ஏன் எந்த வழக்கையும் அப்போது தாக்கல் செய்யவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி)*

*4. 2008 ஆம் ஆண்டு தனிப்பட்ட முறையில் உச்ச நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்து, அதன்பின்னர், 2011 ஆம் ஆண்டு, என்னால் சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தமிழக அரசும் அதில் தன்னை இணைத்துக் கொண்டபின், தி.மு.க.–வால் அரசியல் காரணங்கள் மற்றும் 2014 ஆம் ஆண்டைய நாடாளுமன்றத் தேர்தலை மனதில் வைத்துதானே 10–5–2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது? (மேசையைத் தட்டும் ஒலி)*

*5. என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின்பேரில், உச்ச நீதிமன்றம் தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியபோது, திரு. கருணாநிதியின் தலைமையிலான அப்போதைய தமிழக அரசு ஏன் கச்சத் தீவை தாரை வார்த்தது தவறு என பதில் மனு தாக்கல் செய்யவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி)*

*6. அப்போதைய தி.மு.க. அரசு வலியுறுத்தியதால்தான் கச்சத் தீவுப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமை, மீனவர்களின் வலைகளை அங்கே உலர்த்திக் கொள்வதற்கான உரிமை, 1974 ஆம் ஆண்டு ஒப்பந்த ஷரத்துக்களில் சேர்க்கப்பட்டன என்பது உண்மைக்கு மாறான கருத்தல்லவா? ஏனெனில், இதுபோன்ற எந்த ஷரத்தும்*

*1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் இல்லையே? (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றுக்கெல்லாம் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி பதில் கூறுவாரா?*

*முற்பகல் 11–30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்தின்போது, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு தேவையான விளக்கங்களை நானும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அவ்வப்போது அளித்துள்ளோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று விவாதத்தில் பங்கேற்றுப் பேசும்போது, அண்மைக் காலமாக அடுத்தடுத்து நடக்கக்கூடிய கொலைகள், கொள்ளைகள், கூலிப்படையினருடைய அட்டகாசம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்றும், கூலிப்படையினுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது என்றும் உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியுள்ளார்.

குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து வருவது பற்றி நான் சற்று முன் தெரிவித்துள்ளேன். கொலைச் சம்பவங்கள் குறித்து நாளேடுகளில் செய்திகள் வெளியாகும்போது, பொதுவாக அவை கூலிப்படையினரால் நடைபெற்றதாகச் செய்திகள் வெளிவருகின்றன. ஆனால், உண்மை நிலை என்னவெனில், பெரும்பாலான சம்பவங்களில் கொலையுண்டவர்களின் எதிரிகள், உறவினர்கள், கூட்டாளிகள் அல்லது நண்பர்கள் ஆகியோரே இச்செயலில் ஈடுபடுகின்றனர். மேலும், இரு தரப்பினரிடையே முன் விரோதம் காரணமாக, பழிக்குப் பழியாக மாறி மாறி கொலைகள் நடக்கும்போது அச்சம்பவங்களில் இரு தரப்பினருக்கும் வேண்டியவர்களே சம்பந்தப்படுகிறார்கள். ஆனால், அதுபோன்ற சம்பவங்களிலும் கூலிப்படையினர் ஈடுபட்டதாகச் செய்திகள் வெளிவருகின்றன.

அண்மையில் நடைபெற்ற சில கொலைச் சம்பவங்களில் கூலிப்படைகள் ஈடுபட்டதாக நாளேடுகளில் செய்திகள் வெளிவந்துள்ளபோதும் உண்மையில் அச்சம்பவங்களில் கூலிப்படையினர் ஈடுபடவில்லை. எனவே, கூலிப்படையின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை இருப்பதாக

எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளதில் எள்ளளவும் உண்மையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கூலிப்படையினரை அறவே ஒழிக்க, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் காவல் துறையினர் எடுத்து வருகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, சில மளிகைப் பொருட்களின் தற்போதைய விலையை 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு விலைவாசி உயர்ந்துள்ளது என்றும், அதற்கு இந்த அரசுதான் காரணம் என்பது போலவும் தெரிவித்தார். அகில இந்திய அளவில் பொருட்களின் தேவை மற்றும் அவை கிடைக்கும் அளவு, பெட்ரோல், டீசல் போன்ற பொருட்களின் விலை எனப் பல்வேறு காரணங்களால் விலை உயர்வு ஏற்படுகிறது. இந்தக் கொள்கைகளில் எதையுமே மாநில அரசு நிர்ணயம் செய்ய இயலாது. இந்தக் கொள்கைகளை எல்லாம் வகுப்பது மத்திய அரசுதான். எனவேதான், விலைவாசி என்பது அகில இந்திய அளவிலும் கிட்டதட்ட ஒரே அளவாகத்தான் இருக்கிறது. ஆனாலும், விலைவாசி ஏற்றத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் மாநில அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த முடியும். அதுபோன்ற திட்டங்கள் இங்கே தமிழ்நாட்டில் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருவதால்தான் விலைவாசியின் தாக்கம் ஏழை, எளிய, நடுத்தர மக்களைப் பாதிக்காமல் இருக்கிறது.

உர விலையை ஏற்றியது தி.மு.க. அங்கம் வகித்த முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசுதான். இதற்கு அமைச்சரவையில் ஆதரவு தெரிவித்தது தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய அமைச்சர்தான். ஆனால், இதில் மாநில அரசு என்ன செய்ய முடியும் என்பதை யோசித்து எனது தலைமையிலான அரசு உரத்தின் மீதான மதிப்புக் கூட்டு வரியை முழுவதுமாக இரத்துச் செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி) சமையல் எரிவாயுவிற்கான விலையை தி.மு.க. அங்கம் வகித்த முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசுதான் உயர்த்தி வந்தது. இதை மாநில அரசால் கட்டுப்படுத்த இயலாது. ஆனால், எனது தலைமையிலான அரசு எரிவாயு சிலிண்டர் மீதான மதிப்புக் கூட்டு வரியை முழுவதும் இரத்துச் செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி) பெட்ரோல், டீசல் ஆகிய பொருட்களின் விலை உயர்ந்தால் போக்குவரத்துச் செலவு அதிகமாகும். அதன் காரணமாகப் பொருட்களின் விலை உயரும். பெட்ரோல் மற்றும் டீசல்

ஆகியவற்றுக்கான விலையை எண்ணெய் நிறுவனங்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை, நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று முடிவு எடுத்தது தி.மு.க. அங்கம் வகித்த முந்தைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு. பெட்ரோல், டீசல் விலை நிர்ணயத்தின் தவறான கொள்கையைத்தான் தற்போதைய மத்திய பாரதிய ஜனதா அரசும் கடைபிடிக்கிறது.

முற்பகல் 11–35

பெட்ரோல், டீசல் விலை குறைந்தாலும், மத்திய கலால் வரியை உயர்த்தி விட்டது தற்போதைய மத்திய பாரதிய ஜனதா அரசு. டீசலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 13 ரூபாய் 57 காசு எனவும், பெட்ரோலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 11 ரூபாய் 77 காசு எனவும் மத்திய கலால் வரி உயர்த்தப்பட்டுள்ளது. பல மாநில அரசுகளும் தங்கள் மாநிலத்தில் விற்பனை வரியை உயர்த்தியுள்ளன. ஆனால், எனது தலைமையிலான அரசு விற்பனை வரியை உயர்த்தவே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், டீசல் விலை உயர்வு காரணமாகப் பேருந்துக் கட்டணங்களை எனது தலைமையிலான அரசு உயர்த்தாமல் போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் மானியமாக 1,556 கோடி ரூபாயை வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோன்ற நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், விலைவாசி உயர்விலிருந்து பொதுமக்களைக் காக்கும் பல்வேறு நலத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்களைப் பற்றி மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் நேற்று விரிவாக எடுத்துச் சொல்லியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள் பேசும்போது திருட்டு V.C.D.–க்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியுள்ளார். காணொளித் திருட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை காவல் துறை முனைப்புடன் எடுத்து வருகிறது. காணொளித் திருட்டைக் கட்டுப்படுத்தவும், பதிப்புரிமை சட்ட மீறலைக் கண்காணிக்கவும் எனது முதல் ஆட்சிக் காலத்திலேயே, 1995 ஆம் ஆண்டு காணொளித் திருட்டு தடுப்புப் பிரிவு என்ற ஒரு தனிப் பிரிவு எனது தலைமையிலான அரசால் தொடங்கப்பட்டது. தற்போது 12 இடங்களில் இப்பிரிவுகள் உள்ளன. குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் காணொளித் திருட்டுக்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஜூன் 23

குற்றம் 2004 ஆம் ஆண்டு எனது தலைமையிலான அரசால் சேர்க்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், காணொளித் திருட்டு தடுப்புப் பிரிவால் 13,784 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 13,446 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். 108.72 கோடி ரூபாய் மதிப்பிலான திருட்டு குறுந்தகடுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 52 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறை வைக்கப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்தப் பதிலுரை, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தி அளித்திருக்கும் என நான் நம்புகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) எனது, இந்தப் பதிலுரையை ஏற்றுக்கொண்டு, மேதகு ஆளுநர் உரைக்கு, நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுத்த திருத்தங்களை உறுப்பினர்கள் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றித் தருமாறு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. 22–6–2016 அன்று ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு முன்மொழிந்த திருத்தங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(திருத்தங்கள் வலியுறுத்தப் பெறவில்லை.)

22–6–2016 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த திருத்தங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“2016 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்” என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்களால் 20–6–2016 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2016 ஜூன் 23] [பேரவைத் தலைவர்]

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–40*

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2016), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' *(மேசையைத் தட்டும் ஒலி)* என அல்லும் பகலும் பாராது, அயராது உழைத்து, எண்ணிலடங்கா மக்கள் திட்டங்களை வாரி வழங்கிய வள்ளல், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர், ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்களின் உயிர்மூச்சு, *(மேசையைத் தட்டும் ஒலி)* கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தனித்து நின்று மகத்தான வெற்றி பெற்றுள்ளார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ந்து *(மேசையைத் தட்டும் ஒலி)* இரண்டாவது முறையாகத் தமிழக முதல்வராக அரியணை ஏற்று, வரலாற்றுச் சாதனை படைத்த *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எளிய தொண்டனாகிய எனக்கு பல பதவிகள் வழங்கி, உள்ளாட்சியிலே

நகராட்சித் தலைவராகவும், மூன்று முறை தொடர்ந்து சட்டமன்ற வேட்பாளராக வாய்ப்புக் கொடுத்து, மூன்று முறையும் என்னை வெற்றி பெற வைத்து, அமைச்சராகப் பணியாற்றும் நல்வாய்ப்பையும் அளித்த எங்கள் குலதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நானும், எனது சந்ததியினரும் உயிருள்ளவரை நன்றியுடன் இருப்போம் என உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2016)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”*

எனக் கோருகிறேன்.

நேற்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்குச் சமர்ப்பித்ததில் ஒரு சிறு திருத்தம். மாநகராட்சி மேயர் பதவிக்கு மறைமுகத் தேர்தல் நடத்துவது குறித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள, சட்டமுன்வடிவில் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் சென்னை மாநகராட்சி சட்டம் மதுரை மாநகராட்சி சட்டம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டங்களில் மேயர் மற்றும் துணை மேயர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றுவது குறித்த குறிப்பில் ‘ஐந்தில் மூன்று’ என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக ‘ஐந்தில் நான்கு’ எனத் திருத்தி வாசிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்டமுன்வடிவின்மீது கருத்துக் கூற விரும்புகிற மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகக் கருத்துகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால் நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகு 1996 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் ஒரு மாநகர மேயரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிற முறை வந்து, அன்றைக்கு இந்தியாவிலேயே இரண்டு முறை தொடர்ந்து 1996 மற்றும் 2001–லும் சென்னை மாநகரின் வரலாற்றுச் சிறப்புமிக்க

---

@ 22–6–2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(மேசையைத் தட்டும் ஒலி) மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் வணக்கத்துக்குரிய தளபதி அவர்கள். அந்த நிலை, 2006–ல் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிற முறை மாற்றப்பட்டு, மாநகராட்சி மன்ற உறுப்பினர்களால் மேயர் தேர்ந்தெடுக்கப்படுகிற நிகழ்வு நடைபெற்றது. அதற்கான காரணம், அப்போது தமிழகத்தில் 6 மாநகராட்சிகள் இருந்தன. 6 மாநகராட்சிகளில் 4–ல் மட்டுமே தி.மு. கழகம் பொறுப்பேற்றிருந்தது. இரண்டு மாநகராட்சிகளில் வேறு கட்சிகளைச் சேர்ந்த மேயர்கள் இருந்ததாலும், 6 மாநகராட்சிகளிலும் கணிசமான அளவுக்குப் பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் மன்ற உறுப்பினர்களாக இருந்ததாலும், மேயருக்கு பெரிய அளவில் மன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்காது என்பதாலே, 2006 ஆம் ஆண்டு அந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டு மன்ற உறுப்பினர்களால் மேயர் தேர்ந்தெடுக்கப்படுகிற முறை அன்றிலிருந்து தொடங்கியது. 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில். . .

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய வரலாறு வேண்டாம். இந்த சட்டமுன்வடிவைப் பற்றி கருத்தைச் சொல்லி உரையை முடியுங்கள். அவ்வளவுதான்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** அது எப்படி மாறியது என்பது பற்றித்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் எல்லாம் வேண்டியது இல்லை. இந்தச் சட்டமுன்வடிவில் என்ன என்று மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மா. சுப்பிரமணியன்:** 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31 ஆம் நாள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவின்மீது மட்டும் கருத்துகளைச் சொல்லுங்கள். அவ்வளவுதான். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31 ஆம் நாள் இதே அவையில், அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. கே.பி முனுசாமி அவர்கள், while moving the Bill Tamil Nadu Municipal Laws Act 2011, Thiru.

[திரு. மா. சுப்பிரமணியன்] [2016 ஜூன் 23

K.P.Munusamy, Minister for Municipal Administration and Rural Development said, “Direct elections would facilitate better administration of Corporations and Municipalities resulting in more efficient and quick delivery of civic services to the people.” இதே அவையில் இதைச் சொன்னது, அன்றைய உள்ளாட்சித் துறையின் அமைச்சர். சொல்லுகிறபோது, மக்களுக்கு விரைவாகவும், விவேகமாகவும் பணிகள் சென்றடைய நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் தேவை என்பதை வலியுறுத்தினார்கள். அதோடு மட்டுமல்லாமல், அப்போது அமைச்சரால் சொல்லப்பட்ட இன்னொரு செய்தி, Mr. Munusamy said, “It was brought to the notice of the Government that, most of them were merely concentrating on the development of their respective Ward from where they got elected, instead of concentrating on the development of the Corporation or Municipal areas. Therefore, the Government has decided to change the elections from indirect to direct.” ஒரு வார்டு உறுப்பினராக இருந்து மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அந்த வார்டிலேயே அதிகக் கவனம் செலுத்துவதால், மற்ற பகுதிகளில் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது என்பதாலேயே நேரடி மேயர் தேர்தல் என்று கொண்டுவரப்பட்டது. ஆனால், இன்றைக்கு மீண்டும் இங்கே இதற்கான நோக்கக் காரண விளக்க உரையாக சொல்லப்பட்டிருப்பது என்பது, சில மாநகராட்சிகளில் மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவு அவ்வளவாக மேயருக்கு இல்லாததால், மாமன்றங்கள் முறையாகச் செயல்படுவது இல்லை என்றும், மாமன்ற உறுப்பினர்களின் ஆதரவு மேயருக்குக் கிடைக்கும்பட்சத்தில் மாமன்றம் சிறந்த முறையில் செயல்படும் என்றும் கருதப்படுகிறது. இது இன்றைக்கு இந்த மாநகராட்சி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்பதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பெரிய விளக்கம் எல்லாம் வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்று சொல்லி முடியுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டத் திருத்தத்திற்கான நோக்கம், உங்களால் அச்சிடப்பட்டு தரப்பட்டிருக்கின்ற நோக்கத்தைத்தான் படித்துக்கொண்டிருக்கிறேன். வேறு எதையும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உரையை முடியுங்கள்.*

**திரு. மா. சுப்பிரமணியன்:** *இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு தமிழகத்திலே இருக்கின்ற 12 மாநகராட்சிகளில், சென்னை மாநகராட்சியில் இருக்கின்ற 200 இடங்களில் 166 இடங்களை அ.இ.அ.தி.மு.க. பெற்றிருக்கிறது. மதுரையில் இருக்கின்ற 100 இடங்களில் 84 இடங்களை அ.இ.அ.தி.மு.க. பெற்றிருக்கிறது. கோவையில் இருக்கின்ற 100 இடங்களில் 80 இடங்களை அ.இ.அ.தி.மு.க. பெற்றிருக்கிறது. திருச்சியில் இருக்கின்ற 65 இடங்களில் 40 இடங்களை அ.இ.அ.தி.மு.க. பெற்றிருக்கிறது. தஞ்சாவூரில் இருக்கின்ற 51 இடங்களில் 34 இடங்களை அ.இ.அ.தி.மு.க. பெற்றிருக்கிறது. திண்டுக்கல்லில் இருக்கின்ற 47 இடங்களில் 32 இடங்களை அ.இ.அ.தி.மு.க. பெற்றிருக்கிறது. அப்படியானால் தமிழகம் முழுவதும் இருக்கின்ற 12 மாநகராட்சிகளிலும், 80 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அ.இ.அ.தி.மு.க.வினரே இருக்கும் நிலையில், எப்படி மேயருக்கு மன்ற உறுப்பினர்கள் ஆதரவு தராத நிலை என்பது இருக்கும். எனவே இவர்களால் சொல்லப்பட்டிருக்கின்ற. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சுருக்கமாக முடியுங்கள் என்றால் நீங்கள் முடிக்க மாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கொள்கை முடிவு எடுப்பதும், பின்னர் அதை மாற்றிக் கொள்வதும் மாநில அரசின் உரிமை. ஏற்கெனவே தி.மு.க. அரசு இருந்த காலத்தில்கூட அவர்கள் ஒரு கொள்கை முடிவை எடுத்து, பின்னர் அதை மாற்றியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு மீத்தேன் எரிவாயுத் திட்டத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதே தி.மு.க. அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது அதை அவர்களே எதிர்ப்பதாகக் கூறுகிறார்கள். அது கொள்கை முடிவில் ஏற்பட்ட மாற்றம் இல்லையா? அதுபோலத்தான் ஏற்கெனவே அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு முடிவெடுத்திருந்தாலும், இன்றைக்கு ஒரு கொள்கை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்று சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, இல்லையா என்று சொல்லி முடியுங்கள்.*

**திரு. மா. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் 12 மாநகராட்சிகள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. 12–லும் இருப்பது அ.இ.அ.தி.மு.க. மேயர்கள். 12 மன்றங்களிலும் இருக்கின்ற உறுப்பினர்களில் 80 சதவிகிதம் பேர் அ.இ.அ.தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள்.*

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் மானியக் கோரிக்கையிலே பேசுவது வேறு. இந்த* Bill *மீது எதிர்ப்புத் தெரிவிக்கிறீர்களா, ஆதரவு தெரிவிக்கிறீர்களா என்பதைச் சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அவர் விளக்கமாக எங்கெங்கோ போகிறார். (குறுக்கீடுகள்) நான் அவருக்குப் பேசுவதற்குத்தானே வாய்ப்புக் கொடுத்தேன்.* Bill*–ஐ ஆதரிக்கிறாரா,* Bill*–ன் உடைய ஷரத்தைப் பற்றிச் சொன்னால் தீர்ந்து போய்விடும். (குறுக்கீடுகள்)* Voting *இருக்கிறது. என்ன, ஏது என்பதோடு சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்)*

**திரு. மா. சுப்பிரமணியன்:** *எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான காரணங்களைச் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதாலே ஓரிரு காரணங்களை, அதுவும் ஓரிரு மணித் துளிகளிலே சொல்லிவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதியில்லை. (குறுக்கீடு) நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு)*

**திரு. மா. சுப்பிரமணியன்:** *இந்தச் சட்டத் திருத்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற இன்னொரு செய்தி மேயராகவோ, துணை மேயராகவோ தேர்ந்தெடுக்கப்படுபவர் மன்ற உறுப்பினர்களில் 5–ல் 4 பேரால் ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டால் மேயர் பொறுப்பும், துணை மேயர் பொறுப்பும் மாற்றப்படும் என்கின்ற நிலை, அந்தப் பொறுப்பிலிருந்து விலக்கப்படுவார்கள் என்கின்ற அந்தக் குறிப்பும் இருக்கின்றது. எனவே, எதிர்காலத்தில் நீங்கள் யாரை நினைத்தாலும், இன்றைக்கு மேயர், நாளைக்கு இல்லை; இன்றைக்கு துணை மேயர், நாளைக்கு இல்லை* ** *(குறுக்கீடுகள்)*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஜூன் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாத பிரச்சினைகளையெல்லாம் உள்ளே கொண்டு புகுத்துகிறார். அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். திருத்தத்தை ஆதரிக்கின்றீர்களா, இல்லையா என்பது ஒரே கேள்வி. அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், வாய்ப்புத் தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நான், அவர் எழுந்தால் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், இந்த மசோதாவை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? எல்லாவற்றிற்கும் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இதை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? இரண்டில் ஒன்று சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. மா. சுப்பிரமணியன்:** *எதிர்ப்பதாலேதான் இவ்வளவு கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதாலேதான், இந்தத் தீர்மானத்தில் இருக்கிற குளறுபடிகளை, குழப்பங்களை எதிர்த்து கருத்துகளைப் பதிவு செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதியில்லை. நீங்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதுமாதிரி பேசக் கூடாது. இன்னென்ன ஷரத்துக்களை நான் எதிர்க்கிறேன், இன்னென்ன ஷரத்துக்களை ஆதரிக்கிறேன் என்று சொல்லி, அதோடு உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பெரிய விளக்கமெல்லாம் சொல்கிறீர்கள். விளக்கம் வேண்டாம். (குறுக்கீடுகள்) ஏன் முடியாது? திரு. துரைமுருகன், நீங்கள், இப்போதுதான் வந்தீர்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**திரு. மா. சுப்பிரமணியன்:** *ஜனநாயகத்தில் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, துணை மேயர்களாக இருந்தாலும் சரி அல்லது மேயர்களாக இருந்தாலும் சரி, மக்கள்*

[திரு. மா. சுப்பிரமணியன்] [2016 ஜூன் 23

பணியாற்றுவதற்கு முழுமையாய் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லாக் காலமும் பொறுப்பில் இருப்பதுதான் ஜனநாயகம். ஆனால், குறுக்கு வழியில் வெளியேற்றுவதற்கும், குறுக்கு வழியில் பொறுப்புகளைப் பெறுவதற்குமான ஒரு முயற்சியாகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், சென்னை போன்ற பெரு நகரங்களில் இன்றைக்கு 22 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன என்று சொன்னால், 14 சட்டமன்றத் தொகுதிகள் தி.மு.க. வசம் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள், நீங்கள் அதெல்லாம் பேசத் தேவையில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், குற்றச்சாட்டெல்லாம் சொல்லி, Bill–ன்மீது பேசும்போது பேச வேண்டாம். அந்த Bill–ல் இருக்கின்ற ஷரத்தை ஆதரிக்கின்றீர்களா, இன்னென்ன காரணங்களால் ஆதரிக்கிறேன், இன்னென்ன காரணங்களால் எதிர்க்கிறேன் என்று சொல்லி, அதோடு உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** ஆதரிப்பதற்குக் காரணங்களை நீங்கள் அச்சிட்டு தருகிறபோது, எதிர்ப்பதற்குத் தேவையான காரணங்களை இந்த மன்றத்தில் பேசுவதுதானே பொருத்தமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னது முழுவதையும் பதிவு செய்திருக்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொன்னது முழுவதும் பதிவாகிவிட்டது. உட்காருங்கள். இன்னும் மூன்று Bill–கள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) அவர் எங்கே முடிக்கிறார். எதிர்க்கிறோம் என்று சொல்வதோடு தீர்ந்து போய்விட்டது. பிறகு என்ன? எதிர்க்கிறேன் என்று சொல்லிவிட்டார் அல்லவா? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், பேசுங்கள். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** எனவே, 1996–ஐப்போல், 2006–ஐப்போல், 2011–ஐப்போல், மக்களே நேரடியாக மேயரைத் தேர்ந்தெடுக்கும் முறை இருக்க வேண்டும், அதுவே நீடிக்க வேண்டும், இன்றைய சட்டம் தேவையற்றது என்பதை எடுத்துச் சொல்லி நான் இதை எதிர்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2016 ஜூன் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் தேவையற்றது. ஜனநாயகத்தினுடைய குரல்வளையை நெறிப்பது போலுள்ள இச்சட்டத் திருத்தத்தை மக்கள் ஏற்கமாட்டார்கள். காங்கிரஸ் கட்சி அதை ஏற்றுக்கொள்ளாது என்பதை இந்நேரத்திலே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.*

***திரு. பு. வெற்றிவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்' என்பதுதான் புரட்சித் தலைவர் அவர்களுடைய கூற்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கக்கூடிய வெற்றிவேலுக்கும், அங்கே முதல் வரிசையில் உட்கார்ந்திருக்கக்கூடிய அண்ணன் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் ஒரே சட்டம்தான் அண்ணா தி.மு.க.–வில். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே சட்டம்தான், ஒரே தலைவர்தான். நாங்கள் எதற்கும் பயப்படவில்லை. (குறுக்கீடுகள்) 2006–ல். . . (குறுக்கீடுகள்) 2006–ல் உள்ளாட்சித் தேர்தல் நடத்துகிறேன் என்று சொல்லி தி.மு.க. நடத்திய அராஜகம் உலகத்திற்கே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எதைப் பார்த்தும் நாங்கள் பயப்படவில்லை. (குறுக்கீடுகள்) இச்சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். Bill–ல் எல்லாம் இப்படி பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் தீர்மானத்தை எதிர்த்து பல உதாரணங்களையெல்லாம் காரணம் காட்டிப் பேசினார்கள்.*

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2016 ஜூன் 23

ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தளவில், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அது மக்களுக்கான சட்டமாக இருக்கும். மக்களுக்கான திட்டமாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு அறிவிக்கிற அனைத்துத் திட்டங்களும் சரியான முறையில் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதுதான் நோக்கம். தேர்தலுக்காக என்பதெல்லாம் உங்களுடைய கட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அடுத்த தலைமுறைக்காக திட்டங்களைக் கொண்டுவருபவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த சட்டமன்றத்தின் கூட்டத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களின் நலன் கருதி, உள்ளாட்சி அமைப்புகளில் 50% இட ஒதுக்கீடு வழங்க சட்டத் திருத்தம் கொண்டுவந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு பெண்களாய்ப் பிறந்த அனைவரும் மாண்புமிகு அம்மா அவர்களை மனதார வாழ்த்தினார்கள். இப்படி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், அது மக்களுக்கான சட்டம்தான். அதுபோல நீங்கள் சொன்னீர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மேயராக இருந்தார்கள், அவரைப் பாராட்டினீர்கள், அவருக்காகவே பல சட்டங்களை நீங்களும் கொண்டு வந்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதே சட்டத்தை நீங்களும் கொண்டு வந்தீர்கள், இந்த மறைமுகத் தேர்தல் சட்டத்தை நீங்களும் கொண்டு வந்தீர்கள். ஒன்றை உதாரணமாகச் சொல்கிறேன், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தனி நபர்களின் நலன் கருதி பல்வேறு திருத்தங்கள் வெளியிடப்பட்டன. குறிப்பாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்காக அரசாணை எண் 273, நகராட்சி நிருவாகம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசியபோது, ** குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், Bill உள்ளாட்சி சம்பந்தமானது. ** ஏன் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) வேண்டாம், உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜுன் 23]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *குறிப்பாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்காக அரசாணை எண் 273, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20–10–1996 மூலம், அதாவது 'மாண்புமிகு மேயர்' என அழைக்கப்பட வேண்டும் என்று இருந்ததை, 'வணக்கத்திற்குரிய மேயர்' என்று அழைக்க வேண்டும் என்ற சட்டத்தை அவருக்காகக் கொண்டு வந்தார்கள். (குறுக்கீடுகள்) 'வணக்கத்திற்குரிய மேயர்' என்பது பிரிட்டிஷ் காலத்தில் இருந்தது. அதற்குப் பிறகு அதை மாண்புமிகு என்று மாற்றி, திரும்பவும் அவர் மேயராக வந்தபோது 'வணக்கத்திற்குரிய' என்று கொண்டு வரப்பட்டது. இதுமாதிரி சட்டம் எல்லாம் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இந்த மாதிரி பல உதாரணங்கள் இருக்கின்றன. அதேபோல மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் 2011–ல்–முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றிப் பேசினார். அதிலே பார்த்தீர்களென்றால். . .*

*நண்பகல் 12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், அமைச்சர் பேசி முடிக்கட்டும்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாநகராட்சிக்கு மட்டுமல்ல, பேரூராட்சி, நகராட்சி எல்லாவற்றுக்குமே அவர் பேசினார். இன்றைக்குப் பார்த்தீர்களென்றால், நகராட்சி, பேரூராட்சி எதையுமே நாங்கள் மாற்றவில்லை. (குறுக்கீடுகள்) 124 நகராட்சிகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் பேசும்போதும்* quote *செய்தார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் பேசும்போதும் இப்படித்தான் பேசினார். எனவே, அதைப் பற்றிப் பேசவேண்டாம், விட்டுவிடுங்கள். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *நகராட்சிகள் 124–ல் 3,713 வார்டுகள் இருக்கின்றன. அதேபோல் 528 பேரூராட்சிகள் இருக்கின்றன. 528 பேரூராட்சிகளில் 8,258 வார்டுகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும், முடிந்தவுடன் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்றுதானே சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிமுடித்தவுடன் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) முதலில் அனைவரும் உட்காருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அனைவரும் உட்காருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன் என்றுதானே சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *உங்களுடைய உறுப்பினர் பேசும்போது எங்கள் தரப்பில் அனைவரும் அமைதியாக இருந்தார்கள். (குறுக்கீடுகள்) எங்கள் கழகத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், உங்கள் உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் பேசும்போது நாங்கள் எதுவும் பேசவில்லை. (குறுக்கீடு) நீங்கள் அனைவரும் இப்படி எழுந்து நின்றால் எப்படி? எப்படி நாங்கள் பதில் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் என்றுதானே சொல்கிறேன். இப்படி நீங்கள் எழுந்து நிற்கும்போதெல்லாம் என்னை வற்புறுத்தினால் நான் சபையை எப்படி நடத்துவது? (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னேன் அல்லவா? வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் எல்லோருமே இப்படி எழுந்து நின்றால் எப்படி வாய்ப்புத் தருவது? (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன்,*

2016 ஜூன் 23] [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வாய்ப்புக் கேட்கும்போது, எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் வாய்ப்புக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். அதில் ஒன்றும் எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் வாய்ப்புக் கேட்கும்போது நான் வாய்ப்புத் தருகிறேன். ஓர் அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசிக் கொண்டிருக்கிறபோது, அவருடைய பேச்சு முழுமையாக முடியட்டும், நான் வாய்ப்புத் தருகிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொன்னதற்குப் பிறகும், இப்படி நீங்கள் வற்புறுத்துவது அவை நடவடிக்கைகளுக்கு சரியானது அல்ல. (குறுக்கீடுகள்) நான்தான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் அல்லவா? (குறுக்கீடு) நான் சொல்வது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாய்ப்புக் கேட்டால் கொடுக்க வேண்டியதுதான், நான் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நான்தான் உங்களுக்கு பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) Privilege கொண்டுவருவதெல்லாம் இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். முழுவதுமாக அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) நான்தான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னேனே. (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள், அவருடைய பெயரைக் குறிப்பிட்ட காரணத்தினாலும், அவர் எதிர்க்கட்சித் தலைவர் என்பதாலும், அவர் வாய்ப்புக் கேட்பதாலும் நான் கொடுப்பதற்கு மறுக்கவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பின்னால், நான் உங்களை உறுதியாக அழைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களைவிட கொஞ்சம் விவரம் எனக்கும் தெரியும். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் நீங்கள் பேசாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, 528 பேரூராட்சிகள், 8,258 வார்டுகள் இருக்கின்ற காரணத்தினால், 2011 ஆம் ஆண்டு காலத்தில், திரும்பவும் அதை அப்படியே நடத்த வேண்டுமென்று சொன்ன காரணத்தினால்தான், 2011–லே அன்று முன்னாள் அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொன்னார்கள்.*

*அதேபோல, 31–8–2006–ல் இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதுபோல—அப்போது பேசியதில் இன்னொன்றை அவர் குறிப்பிடவில்லை. இதே சட்டம் கொண்டு வருவதற்கு அப்போது சட்டமன்றத்தில் அவர் என்ன பேசியிருக்கிறார் என்றால் "முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலம் வரை (குறுக்கீடுகள்) அவர் பேசியதுதான். (குறுக்கீடுகள்) அவர் பேசிய குறிப்பு என்னிடம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இது சட்டசபை* record. *(குறுக்கீடுகள்) மறைமுகத் தேர்தலாகத்தான் நடைபெற்றிருக்கிறது என்பதையும், இருக்க வேண்டுமென்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, அவர் பேசிய* record–*ன் அடிப்படையில்தான் பேசினேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லவில்லை. 31–8–2006 அன்று நீங்கள் பேசியதுதான். (குறுக்கீடுகள்) சும்மா சத்தம் போடுவதால் ஒன்றும் ஆகாது. சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) பேசியதை வைத்துக்கொண்டுதான் பேசுகின்றேன்.*

*மேலும்,* ward *உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர் அந்தப் பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு அறிந்தவராக இருப்பார். மக்களில் ஒருவராக இருப்பார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை மேயராகத் தேர்வு செய்யும்போது, மக்களின் தேவைகளை நன்கறிந்து பணியாற்ற வாய்ப்பும் ஏற்படுகிறது. தற்போது பல்வேறு மாநிலங்களில் மறைமுகத் தேர்தல் நடைமுறையில்தான் மாநகராட்சி மேயர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, அஸ்ஸாம், பீகார், கோவா, அரியானா, ஒடிசா, பஞ்சாப், இராஜஸ்தான், சிக்கிம், சண்டிகர், டெல்லி, கேரளா, மத்தியப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா போன்ற 18 மாநிலங்களில் மேயர்கள் மறைமுகத் தேர்தல் முறையில் தேர்வு செய்யப்படுகின்றனர். மாமன்ற*

2016 ஜூன் 23] [திரு. எஸ்.பி. வேலுமணி]

உறுப்பினர்களில் ஒருவர் மேயராகத் தேர்வு செய்யப்படும்போது, அவர்கள் உறுப்பினர்களின் பேராதரவுடன் சிறந்த முறையில் பணியாற்ற வாய்ப்பு ஏற்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருதுகிறது.

எனவே, மேற்கூறிய காரணங்களுக்காக, மக்கள் பணி என்கிற மகத்தான சேவை எள் அளவும் பாதிக்கப்படாமல் (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து நடைபெற்று, மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், இந்தச் சட்டத் திருத்தம் மிகவும் அவசியம் என்பதால் இத்தீர்மானத்தை நீங்கள் அனைவரும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற வகையிலே இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த விவாதத்தில் எங்களுடைய உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் தன்னுடைய கருத்துகளை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எடுத்து வைத்து, இதற்கான எதிர்ப்பை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். அதைத்தான் நானும் இங்கே வழிமொழிய விரும்புகிறேன்.

ஆனால், அதேநேரத்தில் உங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இதேபோன்றதொரு நிலையை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள்; அதைத்தான் நாங்கள் இப்போது நிறைவேற்றுகிறோம் என்று சொன்னார். இதுபோல், எல்லாப் பணிகளிலும், நாங்கள் நிறைவேற்றியதை நீங்கள் நிறைவேற்றிக்கொண்டிருந்தால் எனக்கு மிகுந்த மகிழ்ச்சிதான். அதை நாங்களும் வரவேற்கின்றோம். ஆகவே, எல்லாவற்றையும் நீங்கள் பின்பற்ற வேண்டுமென்ற வேண்டுகோளையும் இந்த நேரத்தில் எடுத்து வைக்கிறேன்.

ஆனால், அதேநேரத்தில் அமைச்சர் அவர்கள் இங்கே உரையாற்றுகிறபோது, ஏதோ 'வணக்கத்திற்குரிய மேயர்' என்பதே, என்னுடைய பெயரை குறிப்பிட்டுச் சொல்லி, எனக்காகத்தான் அந்த மசோதாவைக் கொண்டு வந்தார்கள் என்ற நிலையிலே ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால், இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய

[திரு. மு.க. ஸ்டாலின்] [2016 ஜூன் 23

இந்த மசோதா உங்களுடைய ஆட்சி வசதிக்காக, உங்களுடைய கட்சியின் நன்மைக்காக கொண்டு வந்திருக்கிறீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, அவர் என் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற காரணத்தினால் தயவுகூர்ந்து அது அவைக் குறிப்பில் இடம்பெறுவது முறையற்றது. எனவே, தயவுகூர்ந்து எப்படி இங்கே இரண்டு நாட்களுக்கு முன்பாக ஆளும்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜன் செல்லப்பா அவர்கள், ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியதையடுத்து, அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்க வேண்டுமென்று நாங்கள் எடுத்து வைத்த அந்தக் கோரிக்கைக்கு, 'படித்துப் பார்த்ததற்குப் பிறகு நான் முடிவு செய்கிறேன்' என்று நீங்கள் தீர்ப்புத் தந்தீர்கள். அதற்கு அடுத்த நாள், நேரம் இல்லா நேரத்திலே நான் எழுந்து அந்தப் பிரச்சினையை நினைவூட்டினேன். சொல்கிறேன் என்று சொல்லியிருக்கின்றீர்கள். அதற்கும் தீர்ப்பு இல்லை. இந்தக் கூட்டத் தொடர் இன்றோடு முடியப் போகிறது. எனவே, அதற்கும் இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசிய அந்த உரையில், குறிப்பிட்டுச் சொன்ன அந்த வார்த்தையும் அவைக் குறிப்பில் இடம் பெறுவது நியாயமாக இருக்காது. எனவே, தயவுகூர்ந்து பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல தீர்ப்பை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பிக்கும்போதே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மக்களுக்காகத்தான் எந்தச் சட்டத்தையும் கொண்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். அதேபோல், நடந்த நிகழ்வுகளைத்தான் நான் குறிப்பிட்டிருக்கின்றேன். ஆதலால் அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை. (குறுக்கீடுகள்) அதேபோன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தளவில், (குறுக்கீடு) இருங்கள், நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) இன்றைக்கு 234

*தொகுதிகளிலும் உள்ள மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களைத்தான் விரும்புகின்றார்கள். அதுமட்டுமல்ல, சென்னை மாநகராட்சியின் சரித்திரத்திலே (குறுக்கீடுகள்) உள்ளாட்சி மன்றத்திலே ஐந்து ஆண்டுகளும் பொற்காலம். இவ்வளவு திட்டங்களையும் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான். கடந்த 5 வருடத்தில், எந்தக் ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு பொற்காலமாக ஊராட்சிப் பகுதி, நகராட்சிப் பகுதி, பேரூராட்சிப் பகுதி மற்றும் மாநகராட்சிப் பகுதி என அனைத்திற்கும் திட்டங்களை வழங்கியிருக்கின்றார்கள். ஆதலால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்றைக்கும் வெற்றிதான். எப்படி இருந்தாலும் வருகின்ற உள்ளாட்சித் தேர்தலிலே மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான் முழுமையான வெற்றி. இதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது* debate*–க்குரியது, அதில் நான் குறுக்கிடவில்லை. ஒரே ஒரு கேள்வி. மாண்புமிகு வணக்கத்திற்குரிய மேயர் என்று கொண்டு வந்தது எதிர்க்கட்சித் தலைவருக்காகத்தான் என்று சொன்னார். அதை பேப்பரில் படித்தார்கள் என்றால் அவருக்கு ஒரு கெட்டப் பெயர் ஏற்படும். ஆகையினால் அவருடைய பெயருக்கு ஒரு கெட்டப் பெயரை உண்டாக்குகின்ற அளவிற்கு, அமைச்சர் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ சொல்லி இருக்கலாம், அந்த வார்த்தையை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)* Have you done it wantonly?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். இது ஒன்றும் பெரிய* debate *இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், அனுமதியில்லை, உட்காருங்கள். திரு. செங்குட்டுவன் நீங்கள் உட்காருங்கள். கடந்த இரண்டு, மூன்று நாட்களாக நான் திரும்பத் திரும்ப இதைத்தான் சொல்கிறேன். எந்த ஒரு கருத்தையும் என்னிடம் வற்புறுத்த முடியாது. வற்புறுத்துவதால் என்னுடைய தீர்ப்புரையை மாற்றி வரவழைக்க முடியாது. எனக்கு எது நியாயம்*

என்று தோன்றுகிறதோ, என்ன விதியோ, அந்த விதிகளின்படி இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கின்றேன். உங்களுடைய கோரிக்கைகளை நீங்கள் வைக்கலாம். ஆனால், அந்தக் கோரிக்கைகளை விதிகளின்படி ஏற்பதும், ஏற்காமல் விடுவதும் என்னுடைய விருப்பம். புரிகின்றதா? என்னுடைய தீர்ப்பு சரியாக, நீதியின்படிதான் இருக்கும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் திரு. துரைமுருகன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நீங்களே அடிக்கடி எழுந்தால், உங்கள் கட்சி உறுப்பினர்கள் என்ன செய்வார்கள்? (குறுக்கீடு) அனுமதியில்லை. Front bench–ல் உட்கார்ந்திருக்கின்ற நீங்கள் அடிக்கடி இப்படி எழுந்தால் எப்படி? இப்படி எழுந்திருந்தால் எப்படி? (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் தன்னைப் பற்றி (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் தன்னைப் பற்றிச் சொன்னார்கள் என்று என்னிடம் வாய்ப்புக் கேட்டார், நான் வாய்ப்புக் கொடுத்தேன். அவருடைய விளக்கத்தை அவர் சொல்லி முடித்திருக்கின்றார். அதேமாதிரி மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்தச் சட்டத் திருத்தத்திலே பேசும்போது அவருடைய விளக்கத்தைச் சொல்லியிருக்கின்றார். இப்போது, இதில் நீக்குவதற்கு ஒன்றுமே இல்லை. இரண்டு பேர் சொன்னதும் அவைக் குறிப்பில் இருக்கின்றது. அவர் சொன்னதும் இருக்கின்றது, இவர் சொன்னதும் இருக்கின்றது. அதனால், இதைப் பற்றி நாம் ஒன்றும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகையினால், மேற்கொண்டு இதில் என்னை வற்புறுத்த வேண்டாம். விதியையொட்டி என்னுடைய தீர்ப்பைக் கூறி முடித்துவிட்டேன், ஆகையினால் இதை இத்துடன் விட்டுவிடுங்கள் என்று கூறிக்கொள்கின்றேன். (குறுக்கீடு) நான் வாய்ப்புக் கொடுக்காமல் இருந்தால் நீங்கள் நீக்குங்கள் என்று சொல்லலாம். அவருக்கு வாய்ப்புக் கொடுத்து, அவருடைய கருத்தை அவர் பதிவு செய்துவிட்டார். (குறுக்கீடு) திரு. துரைமுருகன் அவர்களுக்கு மைக்கைக் கொடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் வருத்தப்பட்டு சொன்னது எங்களுக்குக் கஷ்டமாக இருந்தது. நாங்கள் உங்களை வற்புறுத்தவில்லை. இந்த சபையில் நீங்கள் சொல்வதுதான் தீர்ப்பு என்பதை பல்லாண்டுக் காலமாக உணர்ந்தவன் நான். (குறுக்கீடு)

2016 ஜூன் 23]

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை உணர்ந்திருந்தால் கொஞ்சம் எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதற்காக நியாயத்தை நாங்கள் சொல்லாமல் இருக்க முடியாது. நியாயத்தை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆராய்ந்து பார்க்காமலே நான் சொல்வதுதான் தீர்ப்பு என்று சொன்னால், அது எப்படி சார் நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் ஒரு கட்சியில் இருந்து வந்தவர்தான், இல்லை என்று சொல்லவில்லை. கொஞ்சம் கிடுக்குப்பிடி இருக்கும். இல்லை என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதையும் மீறி நியாயம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அனுமதியில்லை, நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்புக் கொடுத்து, அதற்குப் பிறகு துணைத் தலைவருக்கும் வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. இப்பொழுது இரண்டு பேர் கூறிய கருத்துகளும் பதிவாகியிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தும் இருக்கிறது. இரண்டும் அப்படியே அவைக் குறிப்பில் இருக்கட்டும் என்று என் தீர்ப்பைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். அதோடு விடுங்கள். மேற்கொண்டு இதைப்பற்றிப் பேச வேண்டாம். விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இன்னும் படிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இருங்கள் படிக்கிறேன். இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் இல்லை. விவாதம் முடிந்ததற்குப் பிறகு வந்து வாய்ப்புக் கேட்காதீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை எதிர்க்கும்வண்ணமாக, நாங்கள்* division–*ஐ கோரியுள்ளோம்.* Division *அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.* Division *வாரியாக வாக்கெடுப்பு நடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனுமதியில்லை. இப்பொழுது விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் "2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2016) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்ற தீர்மானம் அவையின் முடிவிற்கு வைக்கப்பட வேண்டும். எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று தி.மு.க. உறுப்பினர்கள் கோரியுள்ளனர். பேரவைத் தலைவர் எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு அவசியம் என்று கருதும்பட்சத்தில், பேரவை விதி 99–ன்கீழ் இத்தீர்மானம் ஏற்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய வாக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், எண்ணிக் கணிக்கும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை விதி 99 (8)–ன்கீழ், 'ஆம்' என்று ஏற்பவர்களையும், 'இல்லை' என்று எதிர்ப்பவர்களையும் தனித்தனியே அவர்களுடைய இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டு, அவர்களுடைய எண்ணிக்கையைக் கணித்து, பேரவையின் முடிவு என்ன என்பதை அறிவிக்கலாம் என்று கருதுகிறேன். அவ்வாறு கணிக்கப் பெறும்போது ஒவ்வோர் உறுப்பினர் பெயரும் தனித்தனியே பதிவு செய்யப்படமாட்டாது. அந்த அடிப்படையில், நான் இந்த வாக்கெடுப்பை நடத்தலாம் என்று கருதுகிறேன். உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் இருக்கையில் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கீழ்க்கண்ட தீர்மானத்தை அவையின் முடிவிற்கு விடுகிறேன்:*

*"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2016) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது."*

2016 ஜூன் 23] [பேரவைத் தலைவர்]

*வாக்கெடுப்பு நடத்தப்பெற வேண்டும். உறுப்பினர்கள் அவரவர்கள் இருக்கையில் அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் உறுப்பினர்கள் இடம் மாறி உட்கார்ந்து இருப்பதாகத் தகவல் வருகிறது. அவரவர் இடத்தில் உட்காருங்கள். தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*(தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நின்றனர்)*

*பிற்பகல் 12–20*

*உட்காரலாம். தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*(தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நின்றனர்)*

*உட்காருங்கள். இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் 132 பேர். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்ப்பவர்கள் 88 பேர். (குறுக்கீடுகள்) தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) எல்லா உறுப்பினர்களையும் சேர்த்துதான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது வாக்களித்தவர்கள் தி.மு.க.–வின் சார்பாக 83 பேர், காங்கிரஸ் சார்பாக 4 பேர்,* I.U.M.L.*–ல் ஒருவர், ஆக 88 பேர் (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதையும் சேர்த்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) உண்டு, உண்டு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சேர்த்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) எனக்கு இல்லை. நான் ஓட்டுப் போடவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

*பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவுகள் 2 முதல் 10 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

2016 ஜூன் 23]

## (ஆ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2016), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2016)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–25*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.*

*பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.*

---

*@ 22–6–2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2016 ஜூன் 23] [பேரவைத் தலைவர்]

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (குறுக்கீடுகள்) வாய்ப்பு இல்லை, அந்த* Bill *நிறைவேற்றப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் பேசி முடித்தாகிவிட்டது. அந்தச் சட்டமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) அடுத்த* Bill–*ல் பேசுங்கள்.*

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2016), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2016)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது யாராவது பேச வேண்டுமென்றால் பேசுங்கள். (குறுக்கீடு) சுருக்கமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) யார் பேசுகிறீர்கள்? யாராவது ஒருவர் சுருக்கமாகப் பேசுங்கள்.*

---

*@ 22–6–2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

[2016 ஜூன் 23

*__திரு. எ.வ. வேலு__: *மைக் கொடுத்தால்தானே பேசமுடியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதிக்கு முன் தேர்தல் நடத்துவதாக இருந்தால் (குறுக்கீடுகள்) அது நகராட்சிச் சட்டம். இப்போது ஊராட்சிகள் சட்டத்தைத்தானே* move *செய்திருக்கிறார்கள்.*

__மாண்புமிகு பேரவைத் தலைவர்:__ *யாராவது ஒருவர்தான் பேச வேண்டும். யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) நகராட்சிச் சட்டம் நிறைவேறிவிட்டது. (குறுக்கீடு) நான் நேரம் கொடுத்தேன். நீங்கள் யாரும் பேசவில்லையே. இப்போது நீங்கள் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) ஊராட்சிகள் சட்டத்தில் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) ஒருவர்தான் பேச வேண்டும். (குறுக்கீடு) பேசுங்கள். (குறுக்கீடு) நகராட்சி* Bill *எல்லாம் நிறைவேறிவிட்டது. அதில் யாரும் பேசவில்லை.*

*__திரு. எ.வ. வேலு__: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதிக்கு முன் தேர்தல் நடத்துவதாக இருந்தால் 2016 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளினுடைய தேர்தலை நடத்த வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் சட்டம் 21/1994–ல் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருகிறது. இதைக் கொண்டு வருவதால் ஜனநாயகத்திலே குந்தகம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். எனவே, மக்கள் தொகை அடிப்படையிலே உள்ளாட்சித் தொகுதி அல்லது வார்டுகளைப் பிரிக்க வேண்டும். தற்போதுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மக்கள் தொகை அதிகரித்துள்ளது. ஒன்றிய கவுன்சிலர்களுடைய எண்ணிக்கை முன்பு மிகவும் குறைவாக இருந்தது. எனவே, மக்கள்தொகை அடிப்படையிலே வார்டுகளை உருவாக்கினால் ஒன்றியங்களினுடைய வார்டு உறுப்பினர்கள் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று மாவட்ட ஊராட்சியைப் பொறுத்தளவிற்கு 50,000 வாக்குகளுக்கு ஒரு வார்டு அல்லது தொகுதி என்று பிரித்து வைத்திருக்கிறோம். புதியதாக மக்கள் தொகையின் அடிப்படையில் எடுத்தால்தான் மாவட்ட ஊராட்சிகளினுடைய உறுப்பினர்கள் எண்ணிக்கை கூடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்*

2016 ஜூன் 23] [திரு. எ.வ. வேலு]

அவர்களுக்கு ஒரே ஓர் ஊராட்சியை மட்டும் நான் தங்கள் மூலமாக உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருப்பது வேங்கிக்கால் ஊராட்சி என்கிற ஊராட்சியில். முதன்முதலாக அதில் தொகுதியைப் பிரிக்கிறபோது ஒன்றியத்திற்கு ஓர் உறுப்பினர் இருந்தார். 5,000 பேருக்கு ஓர் உறுப்பினர் என்பதுதான் 1994 ஆம் ஆண்டின் பஞ்சாயத்து ராஜ் சட்டம். ஆனால், இன்றைக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருக்கிற அந்த ஊராட்சியில் சுமார் 14,500 வாக்குகள் இருக்கின்றன. அப்படியென்று சொன்னால், அந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருக்கிற அந்த ஊராட்சிக்கே இரண்டு பிரதிநிதித்துவம் ஒன்றியங்களிலே தேவைப்படுகிறது.

பிற்பகல் 12–30

ஆகவே, பழைய முறையில் நீங்கள் தேர்தல் நடத்தினால் அங்கு ஓர் ஒன்றியக் கவுன்சிலர்தான் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால் மக்கள் தொகையின் அடிப்படையில் தேர்தல் நடத்தினால்தான் மாவட்ட, ஊராட்சி உறுப்பினர்கள் அதிகமாக வர முடியும். ஒன்றிய உறுப்பினர்கள் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. 1994 ஆம் ஆண்டைய ஊராட்சிகள் சட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் பெண்களுக்கும், அதேபோன்று தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வார்டுகளை ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இப்போது 10 ஆண்டுகள் முடிந்திருக்கிறது. சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யவில்லை என்று சொன்னால், பிற சமூகத்தினருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகளில் தாழ்த்தப்பட்டவர்கள் வருவார்கள். இன்றைய நிலை நீடித்தால் தாழ்த்தப்பட்டவர்களுடைய உரிமை பறிக்கப்படும். ஏற்கெனவே தொடர்ந்து மேல்குடியிலே இருப்பவர்கள்—பிற scheduled caste என்று சொல்லப்படுகின்ற ஆதி திராவிடர்கள் இல்லாத வார்டுகள் இருக்கும்—தொடர்ந்து அவர்களே இருக்கின்றபோது, ஆதி திராவிடர்களுக்கு வருகிற வாய்ப்பு அங்கு மறுக்கப்படுகிறது. ஆகவே, சுழற்சி முறையிலே தேர்தல் நடத்தினால்தான், அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். தாழ்த்தப்பட்டவர்களுக்கான ஒதுக்கீட்டை பழைய முறையிலேயே அப்படியே பின்பற்றினால் அந்தப் பகுதியிலே இருக்கிற பிற இனத்தவர்களுக்கு அங்கே வாய்ப்பு குறைகிறது. எனவே, சுழற்சி முறையிலே கொண்டு

வரவேண்டுமென்று அடிப்படைச் சட்டமே சொல்லுகின்ற காரணத்தினால், நாம் அந்த அடிப்படையிலே தேர்தல் நடத்தலாம். பெண்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கான ஒதுக்கீடுகள் மக்கள் தொகை அடிப்படையில் இந்த அரசு பிரித்து வைத்திருக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தொடர்ந்து நீங்கள்தான் ஆட்சியில் இருக்கிறீர்கள். தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கிறீர்கள். எனவே, ஏற்கெனவே கால அவகாசம் போதவில்லை என்று சொல்லுவதைவிட, இந்த ** இது வெளிப்படுத்துகிறது. எனவே, இதை ஏற்கெனவே, முன்பே செய்திருக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் சட்டமுன்வடிவின்மீது பேசுங்கள். தேவையில்லாததையெல்லாம் பேசாதீர்கள்.

**திரு. எ.வ. வேலு:** இந்த அரசு, பெண்களுக்கு 50 சதவிகிதம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி சட்டத்தில், அதில் இருக்கின்ற ஷரத்துக்கள், நோக்க காரண விளக்கவுரைகளைப் பற்றிதான்—திருத்தங்கள் வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றிதான்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி, முடிக்க வேண்டும். ** என்று எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக் கூடாது. எனவே, அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. எ.வ. வேலு, வேறு கருத்தைப் பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு 50 சதவிகிதம். . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜூன் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அக்கறையாகப் பேசினார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே ஒரு பெரிய வாய்ப்பு கொடுத்து, இந்தச் சட்டமன்றத்திலேயே உறுப்பினராக இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தக் கருத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். நீங்கள் எப்படி இருந்தீர்கள்? மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். எனவே, அதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடு)*

**திரு. எ.வ. வேலு:** *ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உங்கள் போக்கிற்குப் பேசுகிறீர்களே?*

**திரு. எ.வ. வேலு:** *சுழற்சி முறையிலே வருகிறபோது, அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிற விளக்கத்தில் இருப்பதைத்தான் நான் சொல்கிறேன். எனவே, சுழற்சி முறையிலே அவர்களுக்கு வருகிற வாய்ப்பு அதனால் தடுக்கப்படுகிறது. அந்த வாய்ப்பை, இந்த அரசே மாற்றியமைத்து இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.*

*அதே நேரத்தில் பெண்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு தரவேண்டும் என்று இந்த அரசு கொண்டு வந்ததை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். காரணம், நாங்கள் பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு இருக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பல்வேறு நிலைகளில் வலியுறுத்தியிருக்கிறோம். அந்த அடிப்படையில் மாண்புமிகு*

*முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீட்டை உள்ளாட்சிகளில் கொண்டு வந்ததை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில், பெண்களுக்கான 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டிலே. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உரையை முடியுங்கள். நீங்கள் என்ன மானியக் கோரிக்கையில் பேசுகிற மாதிரி பேசுகிறீர்களே? சட்டமுன்வடிவின்மீது பேசுங்கள். உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.*

**திரு. எ.வ. வேலு:** பெண்களுக்கான *50* சதவிகித இடஒதுக்கீட்டில், ஆதி திராவிட சகோதரிகள், மலைவாழ் மக்கள் சகோதரிகள் இடம்பெற வேண்டும். இல்லையென்று சொன்னால், அவர்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்படும். எனவே, இந்த ஷரத்துக்களையெல்லாம் மாற்றி இந்தச் சட்டத்தைக் கொண்டுவராததால் திராவிட முன்னேற்றக் கழகம் இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரிக்கவில்லை. நாங்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை வன்மையாக எதிர்க்கிறோம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒரு கட்சிக்கு ஒருவருக்குத்தான் பேச அனுமதி. (குறுக்கீடு) நான் கேட்டேன். (குறுக்கீடு) இங்கே பாருங்கள். அந்தச் சட்டமுன்வடிவு குறித்த தீர்மானத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்மொழிந்து, விவாதத்தில் நீங்கள் யாராவது பேசுகிறீர்களா என்று நான் உங்களை நோக்கிப் பார்த்தேன். (குறுக்கீடு) யாரும் பேச முன்வரவில்லை. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் யாரும் பேசவில்லை. அமைதியாக உட்கார்ந்திருந்தீர்கள். அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டுவிட்டதாக நான் அறிவித்தேன். சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னால், அதன்மீது பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னால், அதன்மீது பேசுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியில் கோஷ்டி பூசல் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை இன்று*

2016 ஜூன் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]
*கண்கூடாகப் பார்த்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க் கட்சியில் இருக்கின்ற கோஷ்டி பூசலுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பொறுப்பேற்க முடியாது. நான் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். பேசுவதற்கு எதிர்க் கட்சிக்கு வாய்ப்புத் தரப்படும் என்று தாங்கள் கூறியபோது, எதிர்க் கட்சி கொறடா அவர்கள் திரு. ராஜா, ராஜா என்று அவருடைய பெயரைக் கூப்பிட்டார். ஆனால், அங்கோ, திரு. வேலு அவர்கள் எழுந்து நின்று பேச ஆரம்பித்துவிட்டார். இங்கிருந்து துணைத் தலைவர் அவர்களும் திரு. வேலுவை அமரும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், அவர் அமரவில்லை. பேசி முடித்துவிட்டார். இவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. இப்போது முடிந்தபிறகும், மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார். அவர்களுடைய கோஷ்டி பூசலுக்கு, அவர்களுடைய கட்டுப்பாடின்மைக்கு பேரவைத் தலைவர் எப்படிப் பொறுப்பேற்க முடியும்? அது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் கொடுத்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்தாமல் போனதற்கு நான் காரணமல்ல. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இங்கே பாருங்கள். (குறுக்கீடு) நான் நகராட்சிய திருத்தச் சட்டம் என்று உரக்க படித்தேன். படித்துவிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அழைத்தேன். அமைச்சர் அதை சட்டமாக்க வேண்டுமென்று கேட்டார். (குறுக்கீடு) அதை நான் பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டேன். ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பின்னர் (குறுக்கீடு) இறுதியாக வாக்கெடுப்பிற்கு விட்டு, சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது என்று நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அதற்குப் பின்னரும் நீங்கள் திரும்பவும் வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டால் எப்படி? (குறுக்கீடு) நான் உங்களைப் பார்த்தேன், நீங்கள் யாருமே பேசவில்லை, யாருமே கை தூக்கவில்லை. (குறுக்கீடு) இருங்கள். (குறுக்கீடுகள்) அறிமுக நிலையில் எதிர்க்கிறது என்பது வேறு. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் எதிர்ப்பு தெரிவித்தது பதிவாகி இருக்கிறது. (குறுக்கீடு) அது பதிவாகி இருக்கின்றது. (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள்.*

[2016 ஜூன் 23

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது யார் பேசுவது என்று அவர்களே தெளிவாக முடிவெடுக்கவில்லை என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) நான் முன் வரிசையில் இருப்பதால் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) யார் பேசப் போகிறார்கள் என்று எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கொறடாவைப் பார்த்துக் கேட்கிறார். கொறடா அவர்களோ திரு. ராஜா, ராஜா என்கிறார். ஆனால், பின்னால் வேறு ஓர் உறுப்பினர், திரு. வேலு நின்று பேசிக் கொண்டிருக்கிறார். துணைத் தலைவர் அவரைப் பார்த்து உட்காருங்கள் என்கிறார். அவர் மதிக்கவே இல்லை. அவர் பேசி முடித்துவிட்டார். அதன்பின்னர், இன்னொருவருக்கு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டால் எப்படி முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் எதற்காக எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு)

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாதுரியமாகத் திசை திருப்புகிறார்கள். (குறுக்கீடு) இதில் என்ன பிரச்சினை என்று கேட்டால், Municipality Bill, பஞ்சாயத்து Bill இரண்டைப் பற்றியும் பேச வேண்டும். திரு. ராஜாவை Municipality Bill பற்றியும், திரு. வேலுவை பஞ்சாயத்து மசோதா பற்றியும் பேசச் சொல்லியிருந்தோம். இதுதான் பிரச்சினை. நீங்கள் போகிற வேகத்தில் அதையெல்லாம் pass செய்துவிட்டீர்கள். அதனால், இவர் பேச எழுந்தார், அவரும் பேச எழுந்தார். Municipality Bill வரவில்லை என்று இவர் சொல்கிறார். அதனால் எங்களுக்குள்ளே எந்தவிதமான கோஷ்டி பூசலும் இல்லை, எந்தப் பூசலும் இல்லை. We are one. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள் திரு. துரைமுருகன். (குறுக்கீடு) நகராட்சிய திருத்தச் சட்டமுன்வடிவு என்று தெளிவாகத்தான் நான் படித்தேன். (குறுக்கீடு) படிக்கும்போது நீங்கள் ஒருவரும் கேட்டு, பேசவில்லையென்றால் நான் என்ன செய்வது? அதற்கு நான் பொறுப்பேற்க முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், நீங்கள் பேசுங்கள்.

2016 ஜூன் 23]

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி சட்டத் திருத்தம் குறித்து, ஏற்கெனவே இருந்ததைப்போல மேயர் தேர்வு நேரடியாக இருக்க வேண்டுமென்பதை எங்களுடைய கட்சியின் சார்பாகப் பதிவு செய்கின்றேன்.

தற்போது உள்ளாட்சித் தேர்தல் நடைபெற இருக்கின்றது. கடந்த 2011 ஆம் ஆண்டு தேர்தலில் முஸ்லிம் சமுதாயத்தினர் நிறைந்து வாழக்கூடிய பல்வேறு ஊர்கள், பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதன் காரணமாகச் சரியான முறையிலே தேர்தலை நாங்கள் சந்திக்க முடியவில்லை. குறிப்பாக, காயல்பட்டிணம், கடையநல்லூர், ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி போன்ற பகுதிகளெல்லாம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டதன் காரணமாக அங்கே சரியான முறையிலே நாங்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற முடியவில்லை. எனவே, சுழற்சி முறையிலே இந்தத் தேர்தலை நடத்தினால் வலிமையாக, இந்தச் சமுதாயத்தினுடைய பிரதிநிதித்துவம் உள்ளாட்சியிலே இருக்கும் என்பதை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகக் கோரிக்கையாக வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் பரிசீலிக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசும்போது, இந்தச் சட்டத்திலே மாவட்ட கவுன்சிலர்கள், யூனியன் கவுன்சிலர்களுக்கான தொகுதி வரையறையைப் பற்றிப் பேசினார்கள். கடந்த 1996, அதற்குப் பின்னர் 2001, 2006, 2011 எல்லாமே அதே வரையறையில்தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அதைப்போல தொடர்ந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலும் அதே வரையறை இருந்தது. நீங்கள் எதுவும் செய்யவில்லை என்று உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். சென்சஸ்

எல்லாம் முடிந்தது. ஆனால், இப்பொழுது இருக்கக்கூடிய சூழ்நிலை, வரையறை என்ற அந்த முறை தொடர்ந்து கடைபிடிக்கப்படுகிறது. சென்சஸ் முடிந்த பின்னர் அந்த வரையறையைக் கூடுதலாகப் பண்ணமுடியாது. இன்றைக்கு சட்டமன்றத் தொகுதிகளின் வரையறை முடிந்துவிட்டது. பாராளுமன்ற தொகுதிகளின் வரையறை முடிந்துவிட்டது. ஆனால், 234 தொகுதிகள் மட்டும் அப்படியே இருக்கின்றன. பாராளுமன்ற தொகுதிகளுக்கும் அதே நிலைதான். எனவே, அந்த வரையறையின் அளவு எப்போதுமே மாறாது. எல்லாப் பணிகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் முடிக்கப்பட்டிருக்கின்றன. சட்டமன்றத் தேர்தல் முடிந்து, இந்தக் குறுகிய காலத்தில் சில பணிகளை மேற்கொள்ள முடியாது என்பதால் அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, இந்த வரையறைக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. (குறுக்கீடுகள்) தற்போதைய வார்டுகளின் எல்லைகளுக்கு பொதுமக்கள் பழக்கப்பட்டுக் கொண்டு இருப்பதால், அதே எல்லைகள் தொடர்ந்து இருப்பது குறித்து எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. புதிதாக வார்டு எல்லைகள் நிர்ணயம் செய்யும்போது, சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, ஏற்கெனவே உள்ள ஊராட்சி வார்டு எல்லைகள் மாற்றம் செய்யாமல், இன்றைய தேதியிலுள்ள எண்ணிக்கையின் அடிப்படையில், 2016 ஆம் ஆண்டு ஊராட்சி, உள்ளாட்சித் தேர்தல் நடத்துவது குறித்துப் பரிசீலனை செய்யலாம் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கருதுகிறது. இவ்வாறு மறுநிர்ணயம் செய்யாமல், தேர்தல் நடத்துவதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 28—க்கு உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

அதேபோல, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என எல்லோருக்கும் உரிய முக்கியத்துவத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கொடுக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுப்பதோடு, கூடுதலான முக்கியத்துவமும் கொடுக்கிறது. எனவே, அதைப் பொறுத்தவரையில் எந்த மாற்றுக்

2016 ஜூன் 23] [திரு. எஸ்.பி வேலுமணி]

கருத்தும் கிடையாது. ஆகவே, இந்தத் திருத்தம் நான் சொல்லியவாறு 1996–லிருந்து இதுவரை எல்லா வருடமும் தொடர்ந்து பின்பற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, மக்களுக்காக இந்தச் சட்டம். அதிகாரிகளுடைய சூழ்நிலைகளைப் பொறுத்து, இன்றைக்குத் தொடர்ந்து இது இருக்க வேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டம் வரையறுத்திருக்கிற காலக்கெடுவிற்குள் இந்தத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதால் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2016) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

*பிற்பகல் 12–45*

# 4. அரசினர் தீர்மானம்

## பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமக்கென வாழா தியாகம், தலைநிமிர்ந்த செல்வாக்கு, துச்சமென பகை துரத்தும் போர்க்குணம், வல்லரசு தேசமும் வருகை தந்து வாழ்த்திப் போகிற வல்லமை, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் சக்தியை தமதாக்கும் மகாசக்தி, நினைப்பதெல்லாம் நிஜங்களாக்கி, நிஜங்களையெல்லாம் நிச்சயமாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிச்சயத்தையும் நித்தம் ஜெயிக்கும், சத்தியமாக்கும் வீரத்திருமகள், செந்தமிழர் பூமிக்கு எண்ணில்லா வளங்களைச் சேர்த்துத் தரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் முதற்கண் எனது வணக்க மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே தன்னுயிரென்னும் தவ வாழ்வு வாழ்ந்து, தமிழினமே தன்னுறவென்னும் தாய்மையின் வரம் கொண்டு, 32 ஆண்டுகளுக்குப் பின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் தொடர்ந்து இரண்டாவது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜூன் 23

*முக்காலமும் உழைக்கின்ற மூலவர், முக்கடல் சூழ்ந்த பாரத தேசத்தின் பாராளுமன்றத்தில் மூன்றாம் பெரும் இயக்கம் ஆக்கிய பொற்கால ஆட்சிதரும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பில்லாத் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஐவகை நிலம் சூழ்ந்த அன்னைத் தமிழ் பூமிக்கு ஆறாம் முறையும் முதல்வர், அகிலம் வியக்கும் ஆற்றல்களால் முதல்வர்களின் முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) இன்ன பிற மாநிலங்களும் பின்பற்றவே இணையற்ற திட்டங்கள் தந்து, இலக்கணங்கள் வகுத்திட்ட இந்தியத்தின் இமயம் நிகர் முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வளாகத்தில் எவராலும் எட்ட முடியாத வள்ளலாக, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாக விளங்குகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் பீடுநடை போடுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சிக்கென ஓர் அறையை வழங்கிட ஆணையிட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“பேரவை விதி 25(1)—ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 12–48 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

*–ஏதுமில்லை–*

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the**
**Director of Stationery and Printing,**
**Chennai-600 002.**